بسم الله الرحمن الرحيم نحمده ونصلّي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 1

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

வாராந்திர பத்திரிகை

# பதர்

காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 23

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

7 துல்கஅதா 1437 ஹிஜ்ரி கமரி 11 ஸஹூர் 1395 ஹிஜ்ரி ஷம்ஸி 11 ஆகஸ்டு 2016


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**எவருக்கு துன்பமும் துயரமும் வருகின்றதோ அவர் துர்பாக்கியசாலியாக இருக்கின்றார் என்று கருத வேண்டாம். அவ்வாறில்லை. இறைவன் அவரை நேசிக்கின்றான். காயத்திற்கு மருந்து போடுவதற்கு முன்னதாக வெட்டுவதும் அறுவை சிகிச்சை செய்வதும் அவசியமானதாக இருப்பது போன்றே சோதனையின் தருணத்தில்தான் துஆக்களின் வியக்கத்தக்க சிறப்புகளும் தாக்கமும் வெளிப்படுகின்றது. மேலும், நமது இறைவன் துஆக்களின் மூலமாக அடையாளங்கண்டு கொள்ளப்படுகிறான் என்பதே உண்மையாகும்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்களின் கூற்றுகளிலிருந்து...

அல்லாஹ் விரும்பியிருந்தால் மனிதனை ஒரே நிலைமையில் வைத்திருக்க முடியும். சில சந்தர்ப்பங்களும் விஷயங்களும் எத்தகையவை என்றால் அவற்றின் மீது சில வியக்கத்தக்க அசாதாரணமான நேரங்களும் நிலைமைகளும் வந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் ஒன்றுதான் துக்கம் மற்றும் துயரத்தின் நிலையுமாகும். இந்த மாறுபட்ட நிலைமைகள் மற்றும் நேரங்களில் மாற்றம் ஆகியவற்றின் மூலமாக அல்லாஹ்வின் வியப்பிலும் வியக்கத்தக்க ஆற்றல்களும் இரகசியங்களும் வெளிப்படுகின்றன.

எந்த மக்களுக்கு உலகில் துக்கமும் துயரமும் வருவதில்லையோ, மேலும் எவர்கள் தம்மைத்தாமே மிகவும் நற்பாக்கியமுள்ளவர்களாகவும் செழிப்பான நிலைமையில் இருப்பவர்களாகவும் கருதுகின்றனரோ அவர்கள் அல்லாஹ்வின் பல இரகசியங்களையும் உண்மைகளையும் அறியாதவர் -களாகவும் அதைப் பற்றியே தெரியாதவர்களாகவும் இருக்கின்றனர். இதற்கான உதாரணம் முற்றிலும் இதுபோன்றதுதான். அதாவது, பள்ளிக்கூடங்களில் தொடர்ந்து கல்வி கற்று வருவதுடன் ஒரு குறிப்பிட்ட நேரம் வரை மாணவர்கள் உடற்பயிற்சியும் செய்ய வேண்டும் என்பது கட்டாயமாக வைக்கப்பட்டிருக்கின்றது. இந்த உடற்பயிற்சி மற்றும் விதிமுறைகள் போன்றவற்றின் மூலமாக அவர்களை ஏதாவதொரு போருக்காக ஆயத்தம் செய்வது கல்விக்கான உயர் அதிகாரிகளின் நோக்கமாக இருக்க முடியாது. அவ்வாறே அவர்களது நேரத்தை வீணாக்குவதும் மாணவர்கள் தங்கள் நேரத்தை விளையாட்டிற்கும் கேளிக்கைக்கும் ஒதுக்க வேண்டும் என்பதும் அவர்களது நோக்கமாக இருக்க முடியாது. மாறாக, அசல் விஷயம் என்னவெனில், அசைய விரும்புகின்ற உறுப்புகளை முற்றிலும் எந்தப் பணியையும் செய்யாமல் இருக்கும்படி விட்டு விட்டால் பிறகு அவற்றின் ஆற்றல்கள் அழிந்து வீணாகி விடும். இவ்வாறு அந்தக் குறை நிறைவு செய்யப்படுகின்றது. வெளிப்படையாகப் பார்க்கும் போது உடற்பயிற்சி செய்வதனால் அவர்களது உறுப்புகளுக்கு கஷ்டமும் ஓரளவு சோர்வும் ஏற்படுவது அவர்களது வளர்ச்சி மற்றும் உடல் நலத்திற்கு காரணமாக இருப்பது நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறே நமது இயல்பும் எவ்வாறு அமைந்துள்ளது என்றால் அது நாம் நிறைவைப் பெற வேண்டும் என்பதற்காக கஷ்டத்தையும் கூட விரும்புகின்றது.

எனவே, மனிதர்களை சில நேரங்களில் சோதனைகளில் ஆழ்த்துவது கூட அல்லாஹ்வின் அருளும் பேருபகாரமுமேயாகும். இதன் மூலமாக அந்த மனிதன் இறை நியதியில் திருப்தி கொள்வதுடன் அவனது பொறுமையின் ஆற்றல்களும் அதிகரிக்கின்றன. எந்த நபருக்கு இறைவன் மீது உறுதியான நம்பிக்கையில்லையோ அவரது நிலை இவ்வாறு இருக்கின்றது. அதாவது, அவருக்கு சிறு துன்பம் வந்தாலும் அவர் பதற்றமடைகின்றார். மேலும், அவர் தற்கொலை செய்வதில் சுகத்தைக் காண்கின்றார். ஆனால், மனிதன் முழுமை அடைவதற்கும் அவனிடத்தில் சீர்திருத்தம் ஏற்படுவதற்கும் இதுபோன்ற சோதனைகள் வருவதை விரும்புகின்றன. அதன் மூலமாக அல்லாஹ் மீது அம்மனிதனுக்குள்ள உறுதி வளர வேண்டும். அல்லாஹ் எல்லாவற்றின் மீது வல்லமையுள்ளவனாக இருக்கின்றான். ஆனால், எவர்களிடத்தில் பிரிவினையும் சோதனையும் வருவதில்லையோ அவர்களின் நிலை எவ்வாறு இருக்கின்றது ? என்று பாருங்கள். அவர்கள் முற்றிலும் உலகம் மற்றும் அதன் விருப்பங்களில் மூழ்கி விட்டனர். அவர்களின் தலை மேலே உயர்வதில்லை. மறந்தும்கூட இறைவனைப் பற்றிய எண்ணம் அவர்களுக்கு வருவதில்லை. இத்தகைய மக்களே தங்களது உயர் தகுதியிலிருந்த சிறப்புக்களை வீணாக்கி விட்டனர். மேலும் அதற்குப் பகரமாக கீழ்நிலையிலுள்ள விஷயங்களைப் பெற்றனர். ஏனென்றால் ஈமான் மற்றும் இறை ஞானத்தில் முன்னேறுவது எந்தப் பொருளிலும் செல்வத்திலும் உலக இன்பத்திலும் இல்லாத அந்த சுகம் மற்றும் நிம்மதியை அவர்களுக்கு உருவாக்கித் தந்தது. ஆனால், வேதனை என்னவென்றால், அவர்கள் ஒரு குழந்தையைப் போன்று நெருப்புத் துண்டைப் பார்த்து மகிழ்கின்றனர். அதன் வேதனை மற்றும் அது ஏற்படுத்தும் இழப்பைப் பற்றி அவர்களுக்கு தெரியாது. ஆனால், எவர்கள் மீது அல்லாஹ்வின் அருள் இருக்கின்றதோ மேலும் எவர்களுக்கு ஈமான் மற்றும் உறுதியின் செல்வங்கள் மிகுதியாக வழங்கப்பட இருக்கின்றதோ அவர்கள் மீது சோதனை வருகின்றது.

எங்கள் மீது எந்த சோதனையும் வரவில்லை என்று கூறுபவர்கள் துர்பாக்கியசாலிகள் ஆவர். அவர்கள் செழிப்பாகவும் வசதியாகவும் இருந்து விலங்குகள் போன்று வாழ்வைக் கழிக்கின்றனர். அவர்களுக்கு நாவு இருக்கின்றது. ஆனால் அதனால் உண்மையைப் பேச முடியாது. இறைவனின் புகழ் அந்த நாவில் வருவதில்லை. மாறாக, அது குழப்பமான தீய விஷயங்களைப் பேசுவதற்காகவும் சுவையை சுவைப்பதற்காக மட்டுமே இருக்கின்றது. அவர்களுக்கு கண்கள் இருக்கின்றன. ஆனால், அவற்றால் இயற்கையின் காட்சிகளைப் பார்க்க முடியாது. அவை தீய செயல்களைச் செய்வதற்காக உள்ளன. பிறகு அவர்களுக்கு மகிழ்ச்சியும் சுகமும் எங்கிருந்து கிடைக்கும் ? எவருக்கு துன்பமும் துயரமும் வருகின்றதோ அவர் துர்பாக்கியசாலியாக இருக்கின்றார் என்று கருத வேண்டாம். அவ்வாறில்லை. இறைவன் அவரை நேசிக்கின்றான். காயத்திற்கு மருந்து போடுவதற்கு முன்னதாக வெட்டுவதும் அறுவை சிகிச்சை செய்வதும் அவசியமானதாக இருக்கின்றது.

சுருக்கமாக மனித இயல்பில் ஒரு விஷயம் நடக்கின்றதென்றால் அதன் மூலமாக அல்லாஹ் உலகின் உண்மை நிலை என்ன ? அதில் என்னென்ன துன்பங்களும் விபத்துகளும் வருகின்றன என்பதை நிரூபித்துக் காட்டுகின்றான். சோதனையின் தருணத்தில்தான் துஆக்களின் வியக்கத்தக்க சிறப்புகளும் தாக்கமும் வெளிப்படுகின்றது. மேலும், நமது இறைவன் துஆக்கள் மூலமாகவே அடையாளங்கண்டு கொள்ளப்படுகிறான் என்பதே உண்மையாகும்.

*(மல்ஃபூஸாத் தொகுதி 2, பக்கம் 147-148 புதிய பதிப்பு)*


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தப்லீகையும் அவர்களது அழைப்பையும் அவர்களது பெயரையும் உலகின் எல்லை வரை கொண்டு சேர்ப்பதாக வாக்குறுதி வழங்கியுள்ளான். இந்தப் பணியை அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப நிறைவேற்றவும் செய்தான். வருங்காலத்திலும் இறைவன் செய்வான். ஆனால் அத்துடன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஜமாஅத்திற்கும் தப்லீகின் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள். எனது நூலிலிருந்து அதனை தெரிந்து கொள்ளவும் செய்யுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சஹாபாக்கள் தப்லீக் செய்தது போன்று தப்லீகும் செய்யுங்கள் என்று கூறினார்கள்.

அல்லாஹ்வின் அருளால் இந்தியாவின் ஜமாஅத்தின் அறிமுகமும் பல்வேறு வழியில் நடக்கின்றது. பணியில் இருக்கும் வாழ்வை அர்ப்பணித்தவர்கள், முரப்பிமார்கள் தனிப்பட்ட முறையிலும் தமது முயற்சியை தீவிரப்படுத்த வேண்டும். அடிபடவும் வேண்டியது வருகின்றது. எதிர்ப்புகளும் வருகின்றன. இவையெல்லாம் இருந்தும் நாம் நுட்பமான ஞானத்துடன் தப்லீகின் பணிகளை மேம்படுத்த வேண்டும் - இன்ஷா அல்லாஹ்.

உலகின் மற்ற பகுதியிலுள்ள மக்களும் இதனை கவனத்தில் கொள்ள வேண்டும். அல்லாஹ் தப்லீகின் பணியைச் செய்யுமாறும் அதனை விரிவுபடுத்துமாறும் வழிகாட்டியுள்ளான். ஆனால், நாம் இதற்காக மிக உறுதியான திட்டத்தை ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு நாட்டிலும் வகுப்பது அவசியமாகும். அதன் மூலமே இப்பணியை மேலும் விரிவுபடுத்த முடியும்.

பிறகு தப்லீக் செய்வதுடன் பைஅத் செய்து இணைகின்ற அம்மக்களைப் பாதுகாப்பதும் ஒரு முக்கியமான பணியாகும். சில இடங்களில் தப்லீக் நடக்கிறது. மக்கள் இணையவும் செய்கிறார்கள். ஆனால் அவர்களை பாதுகாப்பதில்லை. பிறகு வந்தவர்களுள் பெரும்பாலோர் வீணாகி விடுகின்றனர்.

ஆப்பிரிக்க நாடுகளிலும் அங்குள்ள முபல்லிக்மார்கள் பிறகு ஏற்பட்ட தொடர்புகளை மேம்படுத்த முயற்சி செய்ய வேண்டும். உள்ளூர் மக்களின் நிலையை அறிந்து கொள்வதற்காக சிறந்த முறையில் திட்டமிடுதல் வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எழுதிய புத்தகங்கள் உள்ளன. அவற்றைப் படிப்பது அவசியமாகும். பிறகு அதனைப் புரிந்து அதிலிருந்து சொற்பொழிவைத் தயார் செய்ய வேண்டும். இந்த வழிகாட்டல் விதிமுறைகள் முபல்லிக்குகளுக்கும் பொருந்தும். அல்லாஹ்வின் வழியில் அழைப்பவருக்கும் பொருந்தும். அதே போன்று அறிவுசார்ந்த நிகழ்ச்சிகளுக்கு செல்பவர்களுக்கும் பொருந்தும். இவ்வாறு சொற்பொழிவு தயாரிக்கப்பட்டிருந்தால் பெரும் பெரும் பேராசிரியர்கள் பெயர்தாங்கி மார்க்க அறிஞர்கள் மார்க்கத்தின் மீது ஆட்சேபனை செய்பவர்கள் கூட தாக்கத்திற்கு உள்ளாவார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நூல்களைப் படிப்பதும் நமக்கு அவசியமாகும். அதனால் நமது மார்க்க அறிவும் அதிகமாகும். அத்துடன் அந்த நூல்களால் நமது ஆன்மீக முன்னேற்றமும் ஏற்படும்.

ஜமாஅத் சகோதரர்கள் தமது முபல்லிக்குகள் முரப்பிகளை எந்த அளவுக்கு கருத்தில் கொள்ள வேண்டுமோ அந்த அளவுக்கு கருத்தில் கொள்வதில்லை. இதுபற்றி சில இடங்களில் புகார்கள் வருகின்றன. ஆனால் இத்துடன் இன்னொரு விஷயத்தையும் நான் கூறுவேன். முரப்பி மற்றும் முபல்லிக்மார்களுக்கு ஒரு பொறுப்பும் இருக்கிறது. இவ்விஷயம் அவர்கள் மீதும் ஒரு பொறுப்பை சுமத்துகிறது. அவர்கள் ஜமாஅத்துகளில் தமது கண்ணியத்தை நிலைநாட்டுவதற்கு அறிவு மற்றும் ஆன்மீக தரத்தின் உயர் நிலையை அடைவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதன் விளைவாக அவர்கள் மீது ஜமாஅத்திலுள்ள எந்தவொரு நபருக்கும் அவர்களைப் பற்றி எந்தவொரு தவறான வார்த்தையும் பேசுவதற்கு வாய்ப்பே ஏற்படக் கூடாது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எந்தவோர் அடையாளத்தை காட்ட வந்தார்கள் என்றால் தமது துஆவினால் உலகில் பெரும் பெரும் புரட்சிகளை ஏற்படுத்தக்கூடிய அடியார்களை உருவாக்குவது அவர்களது வருகையின் ஒரு நோக்கமாக இருந்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறியுள்ள சில அறிவிப்புகள், படிப்பினைகளைத் தருகின்ற பல்வேறு உதாரணங்கள், சம்பவங்கள் ஆகியவற்றின் ஒளியில் ஜமாஅத் சகோதரர்களுக்கு ஹுஸூர் அவர்கள் வழங்கியுள்ள முக்கிய போதனைகள்.

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் புதூஹ் பள்ளிவாயிலில்**

**8 ஜுலை 2016** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **8 வஃபா** மாதம் ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ ـ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ـ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ـ اِيَّاكَ نَعْبُدُ

وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ ـ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ـ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ـ

இப்போது நான் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய மேற்கோள்களிலிருந்து சில விஷயங்களை எடுத்து வைப்பேன். ஒவ்வொரு மேற்கோளும் தனித்தனியானது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு போதனை மற்றும் பாடத்தைக் கொண்டதும் ஆகும். சில கருத்துக்களை அன்னார் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைச் சான்று காட்டிக் கூறியுள்ளார்கள். முதல் விஷயம், தப்லீக் சம்பந்தமானது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்தியா – பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு காதியான் ஜமாஅத்திற்கு ஆண்டு மாநாட்டின் போது ஒரு தூதுச் செய்தி அனுப்பியிருந்தார்கள். அதில் நீங்கள் தப்லீக் செய்ய வேண்டும் என்று கவனமூட்டினார்கள். இந்த விஷயத்தில் மிகவும் கவனம் தேவைப்படுகிறது. சந்தேகமின்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அல்லாஹ் 'நான் உமது தப்லீகை பூமியின் எல்லை வரை எட்ட வைப்பேன்' என்று இல்ஹாம் மூலம் அறிவித்திருந்தான். (அல் ஹகம் 27 மார்ச், 6 ஏப்ரல் 1898 தொகுதி 2, பக்கம் 13, எண்.5-6)

பிறகு மேலும் அல்லாஹ் இவ்வாறும் கூறினான்: உமது பெயரை இறைவன் இவ்வுலகம் துண்டிக்கப்படும் வரை கண்ணியத்துடன் நிலை நிற்கச் செய்வான். உமது அழைப்பை உலகின் எல்லை வரை கொண்டு சேர்ப்பான். (ஆயினயே கமாலாத்தே இஸ்லாம். ரூஹானி கஸாயின் தொகுதி 5, பக்கம் 648) அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தப்லீகையும் அவர்களது அழைப்பையும் அவர்களது பெயரையும் உலகின் எல்லை வரை கொண்டு சேர்ப்பதாக வாக்குறுதி வழங்கியுள்ளான். இந்தப் பணியை அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப நிறைவேற்றவும் செய்தான். வருங்காலத்திலும் இறைவன் செய்வான். ஆனால் அத்துடன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஜமாஅத்திற்கும் தப்லீகின் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள். எனது நூலிலிருந்து அதனை தெரிந்து கொள்ளவும் செய்யுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சஹாபாக்கள் தப்லீக் செய்தது போன்று தப்லீகும் செய்யுங்கள் என்று கூறினார்கள்.

எவ்வாறிருப்பினும், அல்லாஹ்வின் வாக்குறுதியிலிருந்து முழுமையாகப் பங்கு பெறுவதற்குக் கூட முயற்சி செய்ய வேண்டியதிருக்கிறது. நிச்சயமாக, அல்லாஹ்வின் வாக்குறுதி இருக்கிறதுதான். அல்லாஹ் கூட இந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக நபியிடம் பைஅத் செய்தவர்களிடம் பொறுப்பை சுமத்தியுள்ளான். தீவிரமாக அதில் பங்கெடுத்து இறைவனின் அருளுக்கு வாரிசாகுமாறு கூறியுள்ளான். பிறகு இவ்வாறும் நடக்கிறது. அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப இவர்களின் பணிகளில் அளவற்ற பரக்கத்துகளையும் வழங்குகிறான். புதிய புதிய வழிமுறைகளை உருவாக்குகிறான். அல்லாஹ் எவ்வாறு தப்லீகிற்காக பல்வேறு வழிமுறைகளை உருவாக்குகிறான் என்பதையும் பார்த்து வருகிறோம். எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய மேற்கோளிலிருந்து தப்லீக் சம்பந்தமான பகுதியை எடுத்து வைக்கிறேன். அதில் அப்போது காதியானில் அஹ்மதிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவும் ஓர் எல்லைக்குட்பட்ட வசதி வாய்ப்புகளே இருந்த நிலையிலும் கூட இந்த முக்கியமான கடமையின் பக்கம் அவர்கள் கவனமூட்டினார்கள். தர்வேஷ்களுக்கு தைரியமூட்டவும் செய்தார்கள். தைரியமூட்டுவதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஆரம்ப காலத்தின் சான்றுகளை எடுத்து வைத்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தர்வேஷ்களை விளித்து கூறுகின்றார்கள்: நிச்சயமாக உங்களது எண்ணிக்கை காதியானில் 313 பேர். ஆனால், ஒரு விஷயத்தை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் காதியானில் அல்லாஹ் கூறிய பணியைத் தொடங்கிய போது காதியானில் அஹ்மதிகளின் எண்ணிக்கை இரண்டு மூன்றாகவே இருந்தது. முன்னூறு பேர் நிச்சயமாக மூன்று பேரை விட அதிகமானவர்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது காலத்தில் காதியானின் மக்கள் தொகை ஆயிரத்து நூறு பேர் ஆகும். 1100 பேர் என்பது மூன்று பேருடன் ஒப்பிடும் போது 366 பேருக்கு ஒருவர் என்ற விகிதாச்சாரமாகும்.

இந்த தூதுச் செய்தி அனுப்பும் போது அன்னார் கூறுகின்றார்கள்: இப்போது காதியானின் மக்கள் தொகை பன்னிரெண்டாயிரம் என்று வைத்துக் கொண்டால் கூட தற்போது இருக்கிற அஹ்மதிகளின் எண்ணிக்கையோடு ஒப்பிடும் போது 366 பேருக்கு ஒருவர் அஹ்மதியாக இருப்பதாகப் பொருள்படும். முதலில் 366 பேருக்கு ஒருவர் தான் அஹ்மதியாக இருந்தனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பணியைத் தொடங்கிய போது அவர்களுக்கு இருந்த பலத்தை விட இப்போது அஹ்மதிகளுக்கு அங்கிருப்பவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது உள்ள பலம் பத்து மடங்கு அதிகமாகும். பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பணியைத் தொடங்கிய போது காதியானுக்கு வெளியில் எந்த அஹ்மதிய்யா ஜமாஅத்தும் இருந்ததில்லை. இப்போது இந்தியாவில் கூட இருபது கணக்கில் ஜமாஅத் நிலைநாட்டப்பட்டுள்ளது. இந்த ஜமாஅத்துகளை விழிப்பூட்டி ஒழுங்குபடுத்துவது புதிய உறுதியுடன் நிற்க வைப்பது, இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் தப்லீகை இந்தியாவில் நாலாபுறமும் பரப்பும் நோக்கில் ஆற்றல்களை ஒன்று திரட்டுவது, உங்களது பணியேயாகும். (சவானிஹ் ஃபஸ்லே உமர் தொகுதி 4, பக்கம் 388-389) இப்போது இதே ஒப்பீட்டை செய்யும் போது காதியானின் அஹ்மதிகளின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் உள்ளது என்றால் அத்துடன் அங்குள்ள மக்கள் தொகையும் அதிகரித்திருக்கும். வசதிவாய்ப்புகளும் முன்னரை விட அதிகமாகும். நமது வசதி வாய்ப்புகள் அல்லாஹ்வின் அருளால் மிகவும் அதிகமாக உள்ளன. அல்லாஹ்வின் அருளால் இந்தியாவின் ஜமாஅத்தின் அறிமுகமும் பல்வேறு வழியில் நடக்கின்றது. பணியில் இருக்கும் வாழ்வை அர்ப்பணித்தவர்கள், முரப்பிமார்கள் தனிப்பட்ட முறையிலும் தமது முயற்சியை தீவிரப்படுத்த வேண்டும். அடிபடவும் வேண்டியது ஏற்படுகிறது. எதிர்ப்புகளும் வருகின்றன. இவையெல்லாம் இருந்தும் நாம் நுட்பமான ஞானத்துடன் தப்லீகின் பணிகளை மேம்படுத்த வேண்டும் – இன்ஷா அல்லாஹ். உலகின் மற்ற பகுதியிலுள்ள மக்களும் இதனை கவனத்தில் கொள்ள வேண்டும். அல்லாஹ் தப்லீகின் பணியைச் செய்யுமாறும் அதனை விரிவுபடுத்துமாறும் வழிகாட்டியுள்ளான். இது திருக்குர்ஆனின் கட்டளையாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதனைக் கூறியுள்ளார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் இறைவன் கட்டளை இட்டிருந்தான். ஆனால், நாம் இதற்காக மிக உறுதியான திட்டத்தை ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வொரு நாட்டிலும் வகுப்பது அவசியமாகும். அதன் மூலமே இப்பணியை மேலும் விரிவுபடுத்த முடியும். பிறகு தப்லீக் செய்வதுடன் பைஅத் செய்து இணைகின்ற அம்மக்களைப் பாதுகாப்பதும் ஒரு முக்கியமான பணியாகும். சில இடங்களில் தப்லீக் நடக்கிறது. மக்கள் இணையவும் செய்கிறார்கள். ஆனால் அவர்களைப் பாதுகாப்பதில்லை. பிறகு வந்தவர்களுள் பெரும்பாலர் வீணாகி விடுகின்றனர். இந்தியாவில் அதிக அளவில் ஏழை மக்கள், கிராமப்புற மக்கள் பைஅத் செய்கின்றனர். எதிர்ப்புகள் வந்தவுடன் சில பலவீனமான ஈமான் உள்ளவர்கள் அச்சத்தால் பலவீனம் காட்டுவதற்கு தொடங்கி விடுகின்றனர். நமது ஜமாஅத் அமைப்பினர், திட்டமிடுபவர்கள் எவ்வாறு தப்லீக் பணிகளில் திட்டமிட்டுச் செய்கிறார்களோ அங்கு அல்லாஹ்வின் அருளால் மிக நல்ல பணிகள் நடக்கின்றன. அது தவிர இஸ்லாஹ்–வ–இர்ஷாதின் ஒரு பிரிவாகிய நூருல் இஸ்லாமும் தப்லீக் பணிகளை அதன் பல்வேறு வழிமுறைகளின் மூலம் செய்து வருகின்றது. இதைத் தவிர வக்ஃபே ஜதீதின் நிஸாமத்தே தப்லீக் மூலமாகவும் பணி நடக்கின்றது. அதைப் போன்று வக்ஃபே ஜதீது துறையின் மூலமாகவும் பணிகள் நடைபெறுகின்றன. அங்கெல்லாம் எதிரிகள் சென்று புதிய அஹ்மதிகளை புதிதாக பைஅத் செய்தவர்களைத் தொந்தரவு செய்ய முயற்சி செய்கிறார்கள். அப்பகுதிகளுக்குச் சென்று புதிதாக பைஅத் செய்தவர்களுக்கு தைரியமூட்ட வேண்டும். மாவட்ட மற்றும் தலைமைப் பிரதிநிதிகளும் எங்கிருந்தாவது ஓர் அஹ்மதிக்கு ஏதாவது துன்பமிழைக்கப்பட்டிருப்பதாகத் தகவல் வந்தால் அது ஒரு சிறிய ஊராக இருந்தாலும் சரி அங்கு உடனே செல்ல வேண்டும். அதுபோன்று ஆப்பிரிக்க நாடுகளிலும் அங்குள்ள முபல்லிக்மார்கள் பிறகு ஏற்பட்ட தொடர்புகளை மேம்படுத்த முயற்சி செய்ய வேண்டும். உள்ளூர் மக்களின் நிலையை அறிந்து கொள்வதற்காக சிறந்த முறையில் திட்டமிடுதல் வேண்டும். நான் ஏற்கனவே தர்ஸிலும் அநேகமாக குத்பாவிலும் குறிப்பிட்டிருந்தேன். அஹ்மதிய்யத்தின் எதிரிகள், இவர்களை எவ்வாறு அஹ்மதிய்யத்திலிருந்து வெறுக்க வைக்கலாம் என்று உடனே செல்கிறார்கள்.

எவ்வாறிருப்பினும், எல்லா இடத்திலும் குறிப்பாக அதிகமாக பைஅத் நடக்கின்ற இடங்களில், பணிகள் வேகமாக நடைபெறுகின்ற ஏழை நாடுகளில் நாம் இதனைச் செய்ய வேண்டும். பிறகு ஒரு சம்பவத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அது காஜா கமாலுத்தீன் சாஹிப் தொடர்பானதாகும். அவர்கள் இரண்டாவது கிலாஃபத்தின் தேர்தல் நடைபெற்ற போது குழப்பத்தால் பீடிக்கப்பட்டு பைஅத் செய்யாதவர்களின் தலைவர்களுள் ஒருவராகி விட்டார். தலைமையே அவருக்கு வேண்டியிருந்தது. எப்படியாவது அது அவருக்கு கிடைத்து விட்டது. அவரைப் பற்றி அவர் எவ்வாறு தமது அறிவை வளர்த்துக் கொண்டார்? அவரது சிறந்த சொற்பொழிவுகள் பேச்சுகளின் இரகசியம் என்னவாக இருந்தது? என்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: காஜா கமாலுத்தீன் சாஹிபுடைய வெற்றிக்கு பெரும் காரணம் என்னவெனில், அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது நூல்களைப் படித்து லெக்சர்களைத் தயார் செய்பவராக இருந்தார். பிறகு காதியான் வந்து சிலவற்றை ஹஸ்ரத் முதல் கலீஃபாவிடம் கேட்பார். சிலவற்றை வேறு சிலரிடம் கேட்பார். இவ்வாறு ஒரு முழுமையான லெக்சர் தயார் செய்வார். பிறகு அதனை எடுத்துக் கொண்டு இந்தியாவில் பல்வேறு நகரங்களுக்கு சுற்றுப்பயணம் செய்வார். இதனால் நல்ல வெற்றியைப் பெற்றார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: காஜா கமாலுத்தீன் கூறி வந்தார். ஒரு பன்னிரெண்டு லெக்சர் ஒருவரிடம் இவ்வாறு ஆயத்தம் செய்யப்பட்டவை கிடைத்தால் அவர் அசாதாரண பிரசித்தி பெற முடியும். மேலும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: காஜா சாஹிப் ஏழு சொற்பொழிவுகளைத்தான் ஆயத்தம் செய்திருப்பார். அதற்குள் இங்கிலாந்து சென்று விட்டார். அந்த ஏழு சொற்பொழிவுகளினாலேயே பெருமளவில் மக்களிடம் வரவேற்பைப் பெற்றார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு லெக்சர் மட்டும் தயார் செய்து கொண்டு அது நன்றாக நினைவிலும் இருக்கும் என்றால், நல்ல தாக்கம் ஏற்பட முடியும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் முதலில் எழுதிய முப்பது புத்தகங்கள் உள்ளன. அவற்றை படிப்பது அவசியமாகும். பிறகு அதனைப் புரிந்து அதிலிருந்து சொற்பொழிவைத் தயார் செய்ய வேண்டும். சற்று விரிவாக விளக்கி விட்டு தொடர்ந்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்: இவ்வாறு அரபி இலக்கணங்களுக்கு தனியாக ஆசிரியர் இருந்தார். பிறகு இப்போது இன்னொரு காலம் வந்தது. விஞ்ஞானம் முன்னேற்றத்தைப் பெற்றது. எல்லாவற்றிலும் *Specilization, Speciality* செய்யும் காலம் தொடங்கி விட்டது. இவ்வாறு சொற்பொழிவாளரும் கூட கருத்துக்களை நன்றாக ஆயத்தம் செய்து கொள்ள வேண்டும். அதனையே வெளியில் சென்று சொற்பொழிவாக வழங்க வேண்டும். இயக்கத்தின் நோக்கங்கள் தொடர்பாக அந்த சொற்பொழிவுகள் இருக்கும் எனில் நாம் இங்கிருக்கும்போதே அவர்கள் என்ன பேச வேண்டும் என்பது நமக்கு தெரிய வரும். உள்ளூரின் தேவையை அறிந்து பேசுவதே அசல் சொற்பொழிவாகும். அதற்கு ஆதரவாக உள்ள சில கருத்துக்களையும் பேசலாம். (அல் ஃபஸ்ல் 7 நவம்பர் 1945, தொகுதி 33, எண்.261, பக்கம் 3) இந்த வழிகாட்டல் விதிமுறைகள் முபல்லிக்குகளுக்கும் பொருந்தும். அல்லாஹ்வின் வழியில் அழைப்பவருக்கும் பொருந்தும். அதே போன்று அறிவுசார்ந்த நிகழ்ச்சிகளுக்கு செல்பவர்களுக்கும் பொருந்தும். இவ்வாறு சொற்பொழிவு தயாரிக்கப்பட்டிருந்தால் பெரும் பெரும் பேராசிரியர்கள் பெயர்தாங்கி மார்க்க அறிஞர்கள் மார்க்கத்தின் மீது ஆட்சேபனை செய்பவர்கள் கூட தாக்கத்திற்கு உள்ளாவார்கள். கடந்த நாட்களில் இங்கும் ஒரு நிகழ்ச்சி இருந்தது. தப்லீக் பிரிவின் கீழ் இருந்து நடந்திருக்கலாம். அதில் இஸ்ரேலிலிருந்து ஒரு பெரிய யூதர் கலந்து கொண்டார். அவர் பல நூல்கள் எழுதியவராவார். அங்கு நமது ஒரு முரப்பியும் நல்ல ஆயத்தம் செய்து கொண்டு வந்து ஒரு சொற்பொழிவாற்றினார். பேராசிரியர் மிகவும் எச்சரிக்கையுடன் இஸ்லாமிய கிலாஃபத் சம்பந்தமாக சில விஷயங்களைப் பேசினார். பிறகு இஸ்லாத்திற்கு எதிராகவும் பேசினார். நமது இந்த இளைஞர் அதற்கு மிக நல்ல முறையில் பதில் தந்தார். பிறகு அந்தப் பேராசிரியர் என்னை சந்திக்கவும் வந்தார். அங்கு நியமிக்கப்பட்டுள்ள உங்கள் முரப்பி மிகவும் தந்திரமாக செயல்படுபவர் என்று கூறினார். உள்ளபடி இஸ்லாத்தின் மீது தாக்குதல் தொடுப்பவர்கள் அஹ்மதியல்லாதவர்களின் சில கருத்துக்களைக் கூறி அதற்கு மறுப்பு தெரிவிக்கிறார்கள் அல்லது அவர்களிடம் ஆதாரங்கள் இருப்பதில்லை. ஆனால், அஹ்மதிய்யா ஜமாத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களால் தரப்பட்ட அவர்களது நூலிலுள்ள அறிவுகள் எத்தகையது எனில் நல்ல முறையில் சொற்பொழிவை தயார் செய்திருந்தால் எவரது வாயையும் அடைத்து விடலாம். அவர்களுக்கு முன்னால் எவரும் நிற்க இயலாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நூல்களைப் படிப்பதும் நமக்கு அவசியமாகும். அதனால் நமது மார்க்க அறிவும் அதிகமாகும். அத்துடன் அந்த நூல்களால் நமது ஆன்மீக முன்னேற்றமும் ஏற்படும்.

பழைய மக்களுக்கு எந்த அளவுக்கு தப்லீகில் ஆர்வம் இருந்தது என்பதை விளக்கியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) ஓரிடத்தில் கூறுகிறார்கள்: நான் சிறியவனாக இருந்தேன். அப்போது எனது சிறு வயது நண்பர்களுடன் சேர்ந்து தஷ்ஹீஸுல் அஹ்ஸான் என்ற ஒரு அஞ்சுமனை நிறுவினோம். பிறகு ஒரு பத்திரிகை வெளியிட்டோம். அப்போதைய எனது நண்பர்களுடன் சவுத்ரி ஃபத்ஹே முஹம்மத் சாஹிப் ஸியால் அவர்களும் இருந்தார்கள். பிறகு அவர் இங்கு முபல்லிக்காக இருந்தார். அதாவது U.K - வின் முபல்லிக்காக இருந்தார். அவரது மகன் சவுத்ரி அப்துல்லாஹ் கான் சாஹிபுடைய வீட்டில் மணமுடித்துக் கொடுக்கப்பட்டிருந்த அப்துல்லாஹ் கான் சாஹிப் சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் உடைய சிறிய சகோதரராக இருந்தார்.

அவர்கள் கூறுகிறார்கள்: ஒருமுறை சவுத்ரி அப்துல்லாஹ் கான் சாஹிப் உடைய மனைவி என்னிடம் கூறினார். தந்தையாரை (அதாவது ஃபத்ஹே முஹம்மது சியால் அவர்களை) நீங்கள் நாஸிர் அஃலா ஆக்கி விட்டீர்கள். ஒரு காலத்தில் சதர் அஞ்சுமனின் நாஸிர் அஃலாவாகவே அவர் ஆக்கப்பட்டிருந்தார். அவர் வீட்டில் மிகவும் ஆதங்கப்படுவார். நாம் தப்லீகிற்காக நம்மை வக்ஃப் செய்தோம். இப்போது நம்மை நாற்காலியில் கொண்டு வந்து அமர்த்தி விட்டார்கள் என்று கூறுபவராக இருந்தார். இன்னொருபுறம் நான் பார்க்கிறேன். நமது ஜமாஅத்தில் இத்தகைய சிலரும் இருக்கிறார்கள். அவர்கள் வாழ்வை அர்ப்பணித்தவர்களை மதிக்க வேண்டும் என்று எனக்கு எழுதிக் கொண்டிருக்கின்றனர். (அல் ∴பஸ்ல் 22 அக்டோபர் 1955, தொகுதி 44/9, எண்.247, பக்கம் 6) பழைய மக்களிடம் தப்லீகின் மீது இருந்த ஆர்வமும் கூட ஒரு பாடமாக நமக்கு கிடைக்கிறது. அவர்களிடம் தப்லீகிற்கான ஆர்வம் எவ்வளவு இருந்தது என்பதை அறிய முடிகிறது. அவர்களை அலுவலகங்களில் நாற்காலியில் அமர வைத்தால் கூட அதனை விட தப்லீகிற்கு முதன்மை தருபவர்களாக இருந்தனர். இதனைத் தவிர இக்காலத்தில் இங்கு சிலர் இருக்கிறார்கள். எம்மை தலைமையகத்தில் அமர்த்துங்கள் என்று வேண்டுகோள் விடுக்கின்றனர். இதனை தவிர இன்னொன்றையும் நினைவில் கொள்ள வேண்டும். முரப்பிகள் முபல்லிக்மார்கள் ஆகியோரை ஜமாஅத் எவ்வாறு பார்க்க வேண்டுமோ அவ்வாறு பார்க்கப்படுவ –தில்லை. ஜமாஅத் சகோதரர்கள் தமது முபல்லிக்குகள் முரப்பிகளை எந்த அளவுக்கு கருத்தில் கொள்ள வேண்டுமோ அந்த அளவுக்கு கருத்தில் கொள்வதில்லை. இதுபற்றி சில இடங்களில் புகார்கள் வருகின்றன. ஆனால் இத்துடன் இன்னொரு விஷயத்தையும் நான் கூறுவேன். முரப்பிமார்கள், முபல்லிக்மார்களுக்கும் ஒரு பொறுப்பும் இருக்கிறது. இவ்விஷயம் அவர்கள் மீதும் ஒரு பொறுப்பை சுமத்துகிறது. அவர்கள் ஜமாஅத்துகளில் தமது கண்ணியத்தை நிலைநாட்டுவதற்கு அறிவு மற்றும் ஆன்மீக தரத்தின் உயர் நிலையை அடைவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதன் விளைவாக அவர்கள் மீது ஜமாஅத்திலுள்ள எந்தவொரு நபருக்கும் அவர்களைப் பற்றி எந்தவொரு தவறான வார்த்தையும் பேசுவதற்கு வாய்ப்பே ஏற்படக் கூடாது. சில இடங்களில் சில ஜமாஅத் நிர்வாகத்தில் இருப்பவர்கள் முரப்பிமார்களைப் பற்றி தவறான வார்த்தைகளைக் கூறி விடுகிறார்கள். எங்காவது முரப்பிகள் சீர்திருத்துவதற்காக முயற்சி செய்யும் போது அவர்களுக்கு எதிராக பேச ஆரம்பித்து விடுகிறார்கள்.

பிறகு துஆ ஒப்புக் கொள்ளப்படுவதன் இரகசியம் என்னவென்பது பற்றியும் அதன் ஹிக்மத்தைக் கூறியவாறும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எந்தவோர் அடையாளத்தையும் காட்ட வந்தார்கள் என்றால் தமது துஆவினால் உலகில் பெரும் பெரும் புரட்சிகளை ஏற்படுத்தக்கூடிய அடியார்களை உருவாக்குவது அவர்களது வருகையின் ஒரு நோக்கமாக இருந்தது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: முழு உலகமும் செய்ய முடியாததை ஒரு துஆ செய்ய முடியும். இதனால் அல்லாஹ் எல்லா துஆக்களையும் ஒப்புக் கொண்டு விடுகின்றான் என்றும் பொருளில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மகனார் சாஹிப் ஸாதா முபாரக் அஹ்மது சாஹிப் வஃபாத் ஆனார்கள். மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் வஃபாத் ஆனார்கள். சாஹிப் ஸாதா முபாரக் அஹ்மது சாஹிபிற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மிகவும் துஆவும் செய்திருந்தார்கள். அதுவும் அல்லாஹ்வின் ஓர் அடையாளமாகும். ஏனெனில் அவரது மரணத்தைக் குறித்து குறித்த நேரத்திற்கு முன்பே அன்னார் கூறி இருந்தார்கள். ஒரு விஷயம் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பாக கூறப்பட்டால் அதுவும் ஓர் அடையாளமாகி விடுகிறது. அது அல்லாமல் எல்லா துஆக்களும் ஒப்புக் கொள்ளப்படுவதுமில்லை. எல்லா துஆக்களும் மறுக்கப்படுவதுமில்லை. ஆயினும், துஆவை ஒப்புக் கொள்வதற்கு இறைவன் முடிவு செய்து விட்டால் அது கண்டிப்பாக ஒப்புக் கொள்ளப்படுகிறது. அதனை வேறு எவரும் ரத்து செய்ய முடியாது.

பிறகு துஆ ஒப்புக் கொள்ளப்படுவது தொடர்பாக லாஹூரிகளின் ஓர் ஆட்சேபனைக்கு, அதாவது முஸ்லிஹ் மவ்வூது பற்றி என்ன அடையாளம் நிறைவேறியது? என்ற ஆட்சேபனைக்குப் பதிலளித்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாக இறங்கிய இறை அருள் தொடர்வதும் அவசியமானதாகும். (உங்கள் மூலமாக இது தொடராது என்று கூறுவதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறதுதான் – அதாவது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் பற்றி) என் மூலமாக இது தொடராது என்று வேண்டுமானால் நீங்கள் கூறலாம். ஆனால் எனக்கு எதிராக அவர்கள் தமது இமாம் அல்லது தலைவரை எடுத்து வைக்க வேண்டும். அவர் மூலமாக அந்த அருள் தொடர்கின்றன என்று கூற வேண்டும். இது மிகவும் அவசியமாகும். உண்மையிலேயே வருங்கால விவகாரங்களைக் குறித்து இறைவன் வெளிப்படுத்துகின்றான் என்றாலோ, அசாதாரண முறையில் ஒருவரின் துஆவை கேட்பதாக இருந்தாலோ அத்தகைய ஒருவரை நாம் ஏற்போம். நாம் தவறிலேயே இருந்தோம் என்பதாக ஆகி விட்டாலும் கூட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய உண்மை அதன் மூலம் நிரூபணமாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய உண்மைக்கு பங்கம் ஏற்படுகிற வகையில் ஆட்சேபனை செய்யாதீர்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அல்லாஹ் அனுப்பினான் என்று ஒருபுறம் நம்புகிறீர்கள். அவர்கள் முஜத்தித் ஆக மட்டும் இருந்தார்கள் என்பதாக இருந்தாலும் சரியே. அவர்கள் உண்மையாளராக இருந்தார்கள் என்று நம்புகிறீர்கள். அவர்களது துஆ ஒப்புக் கொள்ளப்பட்டது என்று நம்புகிறீர்கள். அவர்கள் முன்னறிவிப்பு செய்தார்கள் என்று நம்புகிறீர்கள். முதல் விஷயம் எனது பேச்சைக் கேட்க வேண்டாம். ஆனால் என் முன் ஓர் இமாமை கொண்டு வாருங்கள். ஒரு தலைவரை என் முன்னால் கொண்டு வாருங்கள். பிறகு அவரது துஆ ஒப்புக் கொள்ளப்படுகிறது என்று நிரூபித்துக் காட்டுங்கள். அவரது துஆ ஒப்புக் கொள்ளப்படுவதாக நிரூபணமாகி விட்டால் அவரை ஏற்பதில் எமக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. சரிதான் நாங்கள் தவறில் இருக்கிறோம் என்று ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் அடையாளம் நிறைவேறவில்லை என்று கூறுவீர்கள் என்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய உண்மையை நீங்கள் ஆட்சேபனை செய்கிறீர்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இவர்களது நிலையாவது இவர்கள் வாசலையே அடைகிறார்கள். (அல் ∴பஸ்ல் 12 ஜுலை 1940, 12 வ∴பா 1319 ஹிஜ்ரி ஷம்ஸி தொகுதி 22, எண்.157, பக்கம் 6) எந்த விஷயத்தையும் கேட்கவும் விரும்பவில்லை. சிந்திக்கவும் விரும்பவில்லை.

சிறு சிறு சம்பவங்கள், உதாரணங்கள் ஆகியவற்றை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: "அவற்றில் ஒன்று ஒரு கூனல் விழுந்தவளின் உதாரணமாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூனல் விழுந்தவளின் உதாரணத்தைக் கூறி வந்தார்கள். அவளது முதுகில் கூனல் விழுந்திருந்தது. ஒருவர் அவளிடம், உனது முதுகு சரியாக வேண்டும் என்று விரும்புகிறாயா? அல்லது மற்றவர்களுக்கும் கூட கூனல் விழ வேண்டும் என்று விரும்புகிறாயா? என்று கேட்டார். சிலரது இயல்பு பிடிவாதம் உடையதாக இருப்பது போன்று பொறாமை கொண்டிருப்பது போன்று அவளும் பதில் சொன்னாள். நான் கூனல் விழுந்தவளாக நீண்ட காலம் இருந்து விட்டேன். மக்கள் எனது கூனல் முதுகைப் பார்த்து சிரிக்கவும் கிண்டல் செய்பவர்களாகவும் இருந்தனர். எனது கூனல் இனி சரியாகாது. அவ்வாறே நான் கிழவியாகவும் ஆகி விட்டேன். இனி மக்களுக்கு கூனல் விழ வேண்டும். அதனைப் பார்த்து நான் சிரித்து கிண்டல் செய்ய வேண்டும். இனி அதில் தான் ரசனை ஏற்படும் என்று கூறினாள்.

இவ்வாறு சிலருக்கு பொறாமை கொண்ட இயல்பு இருக்கிறது. நமது கஷ்டம் விலக வேண்டும் என்ற நோக்கம் இருப்பதில்லை. மாறாக, மற்றவர்கள் கஷ்டத்தால் பீடிக்கப்பட வேண்டும் என்று அத்தகையோர் விரும்புகின்றனர். (அல் ∴பஸ்ல் 2 ஆகஸ்டு 1961, தொகுதி 5/5, எண்.177, பக்கம் 5) அத்தகைய பொறாமைகளிலிருந்து விலகவும் துஆ செய்ய வேண்டும். இத்தகைய பொறாமைக்காரார்களில் நாம் ஒருபோதும் சேர்ந்து விடக் கூடாது. இத்தகைய பேச்சுக்களைப் பேசுபவர்களுள் ஒருவராக நாம் ஆகி விடக் கூடாது.

பிறகு ஒரு குருடரைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ஒரு குருடர் இருந்தார். இரவு வேளையில் ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தார். ஒரு மனிதருடைய தூக்கம் அதனால் கெட்டுப் போனது. அம்மனிதர் கூறினார். ஹாபிஸ்ஜி தூங்குங்கள். ஹாபிஸ் சாஹிப் கூறினார்: எங்கள் தூக்கம் எது? அமைதியாக இருப்பது தான் எங்கள் தூக்கம். அதன் பொருள் என்னவென்றால், தூக்கம் என்பது கண்ணை மூடிக் கொண்டு அமைதியாக இருப்பதற்குப் பெயராகும். எனது கண்ணோ முதலிலேயே மூடித்தான் இருக்கிறது. பிறகு அமைதியாக இருப்பதுதான். தேவைப்படும் என்றால் நான் அமைதியாகி விடுகிறேன் என்று அவர் கூறினார்.

நம்பிக்கையாளரின் நிலையாவது அவர் யாருக்கும் கஷ்டத்தைத் தரக் காரணமாக இருக்கமாட்டார். ஏனெனில் அவர் கூறுகிறார்: நான் முதலிலேயே அவ்வாறு கஷ்டம் தராமல் இருக்கும் வழக்கம் உள்ளவனாவேன். உலகம் அவரை அடிக்க விரும்பினால் அவர் கூறுவார். என்னை அடித்து விட்டு நீங்கள் பெறப்போவது என்ன? நான்தான் முதலிலேயே இறைவனுக்காக மரணித்து விட்டேன். அல்லாஹ் என்ன விரும்புவானோ அதனைச் செய்யத் தயாராகி விட்டேன். அவனுக்காக எனது உயிரையும் அர்ப்பணிக்கத் தயாராக உள்ளேன். உலகம் மரணத்தைப் பார்த்துப் பயப்படுகிறது. ஆனால் ஒரு நம்பிக்கையாளரை உலகம் கொல்ல விரும்பும் போது அவர் பயப்படுவதில்லை. அவர் கூறுகிறார்: நான் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட அன்றே இறந்து விட்டேன். வித்தியாசம் இவ்வளவு தான். நான் நடமாடுகிற இறந்தவனாக இருக்கிறேன். இப்போது என்னை நீங்கள் பூமிக்குக் கீழ் புதைக்கப் போகிறீர்கள். என்னைப் பொருத்தவரையில் அதிக வித்தியாசம் ஒன்றுமில்லை. (அல் ∴பஸ்ல் 23 மே 1943, தொகுதி 31, எண்.122, பக்கம் 6) இது உண்மையான நம்பிக்கையாளரின் சிந்தனையாக இருக்கிறது.

பிறகு இன்னோர் உதாரணத்தை அன்னார் தருகிறார்கள்: "ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறி வந்தார்கள். ஒரு பெண் திருமணத்தில் கலந்து கொண்டாள். அவள் மிகவும் கருமியாக இருந்தாள். ஆனால் அவளது சகோதரரின் மனைவி தாராளமான மனப்பான்மை கொண்டவராக இருந்தாள். நாத்தனாரும் அவனது சகோதரரின் மனைவியும் ஒரு திருமணத்தில் கலந்து கொண்டனர். தராளமானவள் என்பதன் பொருள் அன்பளிப்பு தருவதில் சற்று தாராளமாக தருபவராக இருந்தாள். (கருமியான) அந்தப் பெண் அந்தத் திருமணத்தில் ஒரு ரூபாய் அன்பளிப்பு செய்தாள். அவர்கள் திரும்பும் போது கருமி பெண்ணிடம் ஒருவர் கேட்டார். அந்த திருமணத்திற்கு எவ்வளவு செலவு செய்தீர்கள்.

அதற்கு அப்பெண், நானும் எனது அண்ணியும் சேர்ந்து 21 ரூபாய் கொடுத்தோம் என்று கூறினார். இதனை சந்தாவுடன் தொடர்புபடுத்தி அன்னார் கூறுகிறார்கள். ஜமாஅத்தில் சிலர் மற்றவர்களை விட அதிகமாக சந்தா கொடுக்கின்றனர். அந்த சிறப்பான சந்தாக்களை ஒட்டுமொத்த ஜமாஅத் சந்தாவாகக் கூறுவதும் அத்தகையதுதான். அந்தக் கருமிப் பெண் நானும் எனது அண்ணியும் சேர்ந்து 21 ரூபாய் கொடுத்தோம் என்று கூறியதைப் போன்றதே ஆகும்.'' (அல் ஃபஸ்ல் 15 ஜூன் 1944, தொகுதி 32, எண்.138, பக்கம் 4) ஆனால் சில செல்வந்தர்களும் கூட கருமியாக இருக்கின்றனர். ஒட்டுமொத்த ஜமாஅத் சந்தாவை தமதாக சுட்டிக் காட்டுகின்றனர். இந்த உதாரணமும் நம்முன் வருகிறது. அதில் தம்மையும் சேர்ந்து சுட்டிக் காட்டாவிட்டாலும் கூட எமது ஜமாஅத் இவ்வளவு சந்தா தருகிறது என்று கூறுகின்றனர். அதே வேளையில் அந்த ஜமாஅத்தில் பெரும்பாலார் ஏழைகளாகவே உள்ளனர். அந்த ஏழைகள் தரும் அளவுக்கு செல்வந்தர்கள் சந்தா தருவதில்லை.

ஒருமுறை விளையாட்டில் சில தவறான செயல் நடந்து விட்டது. மார்க்கம் கருத்தில் கொள்ளப்படவில்லை. இயக்கத்தின் மரபுகள் கருத்தில் கொள்ளப்படவில்லை. அதனை எச்சரித்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறினார்கள்: பாருங்கள். சிரிப்பது மகிழ்வது அனுமதிக்கப்பட்டது தான். தடுக்கப்படவில்லை. ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களும் நகைச்சுவையாக பேசினார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் நகைச்சுவையாகப் பேசினார்கள். நாமும் நகைச்சுவை செய்கிறோம். நாம் நகைச்சுவையாக பேசுவதில்லை என்று கூறவில்லை. நாம் நூறு முறை நகைச்சுவையாகப் பேசுகிறோம். நமது குழந்தைகளிடம் நமது மனைவியிடம் நமது உறவினர்களிடம் நகைச்சுவையாகப் பேசுகின்றோம். ஆனால், எவரையும் தாழ்மைப்படுத்தும் வகையில் அல்ல. (ஒருவரை தாழ்மைப்படுத்தினால் கிண்டல் செய்தால் அத்தகைய கேலி சரியில்லை.) ஒருவரை அவமானப்படுத்தும் வார்த்தை வாயிலிருந்து வந்தால் நாம் இஸ்திக்ஃபார் செய்கிறோம். இதனை ஒவ்வொருவரும் செய்ய வேண்டும். ஒருவரைக் கிண்டல் செய்து அது அவருக்கு மிகவும் தவறாகத் தெரிந்தால் அல்லது அவரது சுயமரியாதைக்கு பங்கம் விளைவிப்பதாக இருந்தால் நம்மிடம் தவறு நிகழ்ந்ததாகக் கருத வேண்டும். இஸ்திக்ஃபார் செய்ய வேண்டும்.

எனவே, ஒரு விளையாட்டை சான்று காட்டி அன்னார் கூறுகின்றார்கள்: ஓரிடத்தில் விளையாட்டு நடைபெற்றது. அப்போது இந்த பேச்சு வந்தது. நான் விளையாட்டை தவறாக நினைப்பதில்லை. சிரிப்பது விளையாடுவது அனுமதிக்கப்பட்டதே ஆகும். சந்தேகமின்றி சிரியுங்கள் விளையாடுங்கள். ஆனால் விளையாடி விளையாடி, அந்த விளையாட்டு விளையாட்டாக இருந்தால் சரிதான். ஆனால், தந்தையின் தாடியுடன் விளையாடப்பட்டால் அது அனுமதிக்கப்பட்டதல்ல. அதாவது தந்தையின் கண்ணியத்தை நசுக்கினால் அதற்கு அனுமதி இல்லை. இறைவனது அந்தஸ்தை இறைவனுக்கே கொடுங்கள். கால்பந்தின் தகுதியை கால்பந்திற்கே கொடுங்கள். கவியரங்கின் அந்தஸ்தை கவியரங்கிற்கே கொடுங்கள். முன்னறிவிப்பின் தரத்தை முன்னறிவிப்பிற்கு கொடுங்கள். (சிலர் கேலி கிண்டல் செய்யும் தொனியில் முன்னறிவிப்புகளை எடுத்துரைக்கின்றனர்.) உங்களுக்கு கேலி கிண்டல் செய்யும் ஆர்வம் இருக்கும் என்றால் லாஹூருக்குச் செல்லுங்கள். அங்குள்ள கவியரங்குகளில் சென்று கலந்து கொள்ளுங்கள். அங்கு கவிதை சொல்பவர்கள் ஒருவர் மற்றவரைப் பார்த்து கிண்டலாகவும் பேசுகின்றனர். அத்தகைய கவியரங்கங்களில் கலந்து கொண்டு உங்கள் ஆர்வத்தை தணியுங்கள். வீணான வார்த்தைகளைப் பேசுவதும் விளையாடவும் நினைத்தால் செல்லுங்கள். கவியரங்கங்களில் சென்று இணைந்து கொள்ளுங்கள். லாஹூரில் சென்று அதனை செய்வீர்கள் என்றால் குறிப்பாக காதியான் மக்களுக்கு போதனை செய்தவாறு கூறுகின்றார்கள்: மேலும் ரப்வா மற்றும் காதியான் போன்ற இடங்களில் எங்கெல்லாம் தலைமையக அமைப்பின் கீழ் விளையாட்டுகள் நடக்கிறதோ அங்குள்ளவர்களுக்கும் அறிவுரை இருக்கிறது.

அவர்கள் கூறுகின்றார்கள்: லாஹூரில் சென்று நீங்கள் செய்வீர்கள் எனில் லாஹூர்வாசிகள் அவ்வாறு செய்தனர் என்று கூறுவர். அஹ்மதிகள் அவ்வாறு செய்தனர் என்று கூறமாட்டார்கள். ஆனால் இங்கிருந்து அதில் பத்தில் ஒரு பகுதி அளவுக்கு செய்தாலும் அஹ்மதிகள் அவ்வாறு செய்தனர் என்று மக்கள் கூறுவர். எனவே, நான் உங்களை கேலி கிண்டலிலிருந்து தடுக்கவில்லை. நான் இவ்வளவே கூறுகிறேன். ஜமாஅத்திற்கு அவப்பெயர் ஏற்படும் அளவிற்கு கிண்டலில் வரம்பு மீறாதீர்கள். (அல் ஃபஸ்ல் 17 மார்ச் 1952, தொகுதி 40/6, எண்.62, பக்கம் 4)

இப்போது உலகில் எல்லா இடத்திலும் காதியான் ரப்வாவில் மட்டுமல்ல. மற்ற எல்லா இடத்திலும் விளையாட்டுகள் இருக்கின்றன. அங்கு இவ்வாறு நடந்தால் ஜமாஅத்திற்கு அதனால் அவப்பெயர் ஏற்படுகிறது. எல்லா இடத்திலும் இவ்விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எனவே, நமது ஒவ்வொரு செயலும் இதனை வெளிப்படுத்த வேண்டும். அது விளையாட்டாக இருந்தாலும் சரி; மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி; கவியரங்கம் ஆனாலும் சரி நாம் ஜமாஅத்தின் கண்ணியத்திற்கு பங்கம் ஏற்பட விடக் கூடாது. அந்தக் கண்ணியத்தையும் பெருமையையும் எப்போதும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எனவே, நான் சில கருத்துக்களை போதனைகளைக் கூறினேன். ஒவ்வொன்றும் தன்னகத்தே ஒரு பாடத்தைக் கொண்டவையாகும். அவற்றை கருத்தில் கொள்ள வேண்டும்.

*(8-வது பக்கத்தின் தொடர்ச்சி...)*

நான் அவநம்பிக்கைக்கு இரையாவதில்லை. ஏனென்றால், 1400 ஆண்டுகளுக்கு முன்னரே இஸ்லாத்தின் தோற்றுனரான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலம் செல்லச் செல்ல இஸ்லாமிய போதனைகளில் சீர்குலைவு ஏற்பட்டு விடும். மேலும், அதன் உண்மையான போதனைகளை மக்கள் மறந்து விடுவர் என்று முன்னறிவிப்பு செய்திருந்தார்கள். இந்த ஆன்மீக இருள் நிறைந்த காலத்தில் அல்லாஹ் உண்மையான இஸ்லாமிய போதனைகளை முழுக்க முழுக்க புதிய வடிவில் உயிர் பெறச் செய்வதற்காக வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும், உடன்படிக்கை செய்யப்பட்ட மஹ்தியாகவும் அனுப்புவான் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியிருந்தார்கள். நான் ஏற்கனவே கூறியிருந்தபடி நாங்கள் எங்கள் ஜமாஅத்தின் தோற்றுனரை வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும் உடன்படிக்கை செய்து கொண்ட மஹ்தியாகவும் ஏற்றுக் கொண்டிருக்கின்றோம். அன்னார் ஆன்மீக தீபத்தின் மூலமாக இஸ்லாத்தின் மகத்தான, என்றென்றும் நிலைத்திருக்கின்ற போதனைகளை ஒரு நிரந்தர பிரகாசத்தின் மூலம் ஒளிபெறச் செய்து விட்டார்கள். அன்னார் இஸ்லாத்தின் உண்மையான போதனைககளின் ஒளியில் பள்ளிவாயிலின் உண்மையான நோக்கத்தை எடுத்துக் கூறியுள்ளார்கள்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

எனவே, அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் எங்கு எப்போது பள்ளிவாயிலைக் கட்டினாலும் அது ஓர் அமைதியின் வீடாக இருக்கும். அங்கு திருக்குர்ஆனின் உயர்வான போதனைகளின் ஒளியில் மக்கள் அல்லாஹ்வை வணங்குவதற்காக ஒன்று சேர்கின்றனர். எனவே, நமது பள்ளிவாயில்களின் கதவுகள் இறைவனை வணங்க விரும்புகின்ற, அமைதியை விரும்புகின்ற அனைவருக்காகவும் அமைதி, அன்பு, ஒற்றுமை போன்ற உயர் தகுதிகளைப் பரப்ப விரும்புகின்றவர் -களுக்காகவும் திறந்திருக்கின்றது. கட்டப்பட்டிருக்கின்ற இந்த பள்ளிவாயிலிற்கு 'மஸ்ஜிது மஹ்மூது' அதாவது புகழ்வதற்குத் தகுதியுடைய பள்ளிவாயில் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. எனவே, உள்ளூர் ஜமாஅத்தின் தலையாய கடமையாவது, அவர்களின் வாழ்வின் ஒவ்வோர் அம்சமும் இஸ்லாத்தின் உண்மையான மற்றும் அமைதியை விரும்புகின்ற போதனைகளைப் பிரதிபலிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். எங்கு அவர்கள், அல்லாஹ்வை வணங்குவதற்காக ஒவ்வொரு நாளும் இந்தப் பள்ளிவாயிலுக்குள் நுழைவார்களோ அங்கு அவர்கள், தாம் வாழ்கின்ற இந்த சமுதாயத்திற்குத் தொண்டாற்ற வேண்டும் என்ற உள்ளத்திலுள்ள தங்களது ஆசையுடனும் உறுதியுடனும் நுழைய வேண்டும். இவர்களின் நல்ல செயல்களின் மூலமாக தமது அண்டை வீட்டுக்காரர்களுக்காகவும் மற்றும் விரிவான சமுதாயத்திற்காகவும் அமைதி, கருணையுள்ளம், நல்லதை விரும்புவது ஆகியவற்றை வெளிப்படுத்திக் காட்டுவதாகும்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

இஸ்லாம் அமைதியின் மார்க்கமாகும் என்பது தெளிவான விஷயமாகும். இதனால்தான் 28 -வது வசனத்தில், 'அல்லாஹ் உங்களை சாந்தியின் வீட்டின் பக்கம் அழைக்கின்றான்' என்று அல்லாஹ் கூறுகின்றான். அரபியில் அமைதிக்காக ஸலாம் என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. இந்த ஒரு சொல்லிற்குப் பல பொருள்களும் கருத்துகளும் இருக்கின்றன. இதற்கு பாதுகாப்பாக இருப்பது என்ற பொருளும் இருக்கின்றது. எல்லா விதமான தீமை மற்றும் தீங்கிலிருந்தும் பாதுகாப்பாக இருப்பது என்ற பொருளும் இருக்கின்றது. அமைதி, கீழ்ப்படிந்து நடப்பது ஆகிய பொருளும் இதற்கு இருக்கின்றது. உண்மையில் ஸலாம் என்பது அல்லாஹ்வின் பண்பாகவும் இருக்கின்றது. அதாவது, அந்த இறைவன் அமைதி மற்றும் நிம்மதியின் பிறப்பிடமாகத் திகழ்கின்றான். இறைவனது பண்புகளைக் கடைபிடித்து நடக்குமாறு முஸ்லிம்களுக்கு கட்டளையிடப்பட்டிருக்கின்றது. அல்லாஹ் அமைதி மற்றும் நிம்மதியின் நீரூற்றாக இருக்கும்போது தமது சமுதாயத்தில் அமைதி, பாதுகாப்பு மற்றும் நிம்மதியை நிலவச் செய்வது முஸ்லிம்களின் கடமையாக ஆகி விடுகின்றது. மேலும் பள்ளிவாயிலின் அடிப்படை நோக்கம் முஸ்லிம்கள் தொழுவதற்காக இடத்தைத் தருவதாகும். அரபியில் தொழுகையை ஸலாத் என்று கூறுவர். அதன் பொருள், பரிவு, அன்பு, கருணையுள்ளம் என்பதாகும். அதாவது, கலப்பற்ற தூய எண்ணத்துடன் தொழுகையை நிறைவேற்றுகின்ற ஒரு முஸ்லிம் அநுதாப உள்ளம் கொண்டவராகவும் பிறரைக் கருத்தில் கொள்கின்ற கருணையுள்ளம் கொண்டவராகவும் இருக்கின்றார். அப்படிப்பட்டவர் எல்லா வகையான நல்லொழுக்கத்திற்கு மாற்றமான மற்றும் சட்டத்திற்குப் புறம்பான செயலைச் செய்வதிலிருந்தும் எல்லா வகையான தீமையிலிருந்தும் விலகியிருக்க முயற்சி செய்கின்றார். எவரது பாதங்கள் இறையச்சத்தின் வழியிலிருந்து ஒருபோதும் தடுமாறாமல் இருக்கின்றதோ, எவர் தமது முழுமையான தகுதியைப் பயன்படுத்தி சமுதாயத்திற்குத் தொண்டு செய்கின்றாரோ அவரே உண்மையான முறையில் இறை வணக்கம் செய்பவராக இருக்கின்றார். சுருக்கமாகக் கூறுவதாக இருந்தால், தம்மைச் சுற்றி இருப்பவர்களிடம் அன்பு மற்றும் கருணையுள்ளத்தை வெளிப்படுத்திக் காட்டுபவரே உண்மையான முஸ்லிமாக இருக்கின்றார். முழு மனித இனத்திற்காகவும் அமைதி மற்றும் சாந்தியின் தலைமையகமாகத் திகழ்வதே உண்மையான பள்ளிவாயிலாகும்.

*(தொடரும்)*

# ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் டென்மார்க் சுற்றுப் பயணம் 5 மே 2016

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அதிகாலை 4.15 மணிக்கு நுஸ்ரத் ஜஹான் பள்ளிவாயிலுக்கு வருகை தந்து ஃபஜ்ர் தொழுகையைத் தொழ வைத்தார்கள். தொழுகையை நிறைவேற்றிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹுத்தஆலா) அவர்கள், தான் தங்கியிருந்த பகுதிக்குச் சென்றார்கள்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹுத்தஆலா) அவர்கள் காலையில் அலுவலகப் பணிகளில் ஈடுபட்டார்கள். பகல் 2.00 மணிக்கு ஹுஸூர் அவர்கள் நுஸ்ரத் ஜஹான் பள்ளிவாயிலுக்கு வந்து ளுஹர் மற்றும் அஸ்ர் தொழுகைகளைச் சேர்த்து தொழ வைத்தார்கள். தொழுகைகளை நிறைவேற்றிய பிறகு ஹுஸூர் அவர்கள், தான் தங்கியிருந்த பகுதிக்குச் சென்றார்கள்.

இந்தத் தருணத்தில் ஹுஸூர் அவர்கள் டென்மார்க்கின் அமீர் சாஹிபிடம் லஜ்னா ஹாலுக்குச் செல்கின்ற இரு வழிகள் உள்ளன. ஒரு வழியில் மாடிப்படிகள் உள்ளன. மற்ற வழியில் *Ramp* (சரிவு) உள்ளது. இந்த இரு வழிகளின் இரு புறமும் வளையங்களை மாட்டுங்கள். அதன் மூலம் கீழே இறங்குவதற்கு வசதியாக இருக்கும் என்று கூறினார்கள்.

இதன் பிறகு நிகழ்ச்சி நிரலுக்கேற்ப 7.00 மணிக்கு ஹுஸூர் அவர்கள் தமது அலுவலகத்திற்கு வந்தார்கள். அங்கு பள்ளிவாயில் இருக்கின்ற பகுதியான *Hvidovre* மாநகராட்சியின் மேயர் *Helle Won Adelborg* அவர்கள் தமது நான்கு கவுன்சிலர்களான *Annete Sjobeck, Maria Durhuus, Kenneth F. Christensen* மற்றும் காஷிஃப் அஹ்மது சாஹிப் ஆகியோருடன் ஹுஸூர் அவர்களைச் சந்திக்கும் நற்பாக்கியத்தைப் பெற்றார்கள். இறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள காஷிஃப் அஹ்மது சாஹிப் அவர்கள் அஹ்மதி இளைஞராவார்.

மேயர் அவர்கள் தம்மை அறிமுகப்படுத்தியவாறு தாம் இந்தப் பள்ளிவாயில் இருக்கும் பகுதியின் மேயர் ஆவேன் என்றும், என்னுடன் இருக்கின்ற மற்றவர்கள் இந்தப் பகுதியின் கவுன்சிலர்கள் ஆவர் என்றும் கூறினார். மேலும், டென்மார்க்கில் இன்று தேசிய அளவில் விடுமுறை நாளாகும் என்று கூறினார். ஹுஸூர் அவர்கள் மேயரிடம் இன்று இங்கு ஏன் விடுமுறை விடப்பட்டுள்ளது? என்று கேட்டார்கள். அதற்கு மேயர் அவர்கள், இன்று ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வானத்திற்குச் சென்ற நாளாகும் என்று கூறினார். இதற்கு ஹுஸூர் அவர்கள், வேறு எந்தவொரு நாடும் இந்தத் தேதியில் விடுமுறை விடவில்லை. பக்கத்து நாடான சுவீடனில் கூட இன்று இதுபோன்று எந்த விடுமுறையும் விடப்படவில்லை என்று கூறினார்கள்.

ஹுஸூர் அவர்கள் இன்றைய நாட்களில் அகதிகளின் நெருக்கடியின் காரணமாக எல்லைப்புறத்தில் அதிகமாக பரிசோதனை செய்யப்படுகிறது. சுதந்திரமாக எவராலும் வர முடியவில்லை என்று கூறினார்கள். அதற்கு மேயர் அவர்கள், எங்களுக்கும் கடுமையாக பரிசோதனை நடைபெறுகின்ற இந்த விஷயத்தில் வருத்தம் இருக்கின்றது என்று கூறினார்கள்.

ஹுஸூர் அவர்கள், நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டும். உலக அமைதிக்காக நாம் முன்னே நிற்க வேண்டும். அமைதியை ஏற்படுத்துவதன் மூலம் இந்த எல்லா துன்பங்களும் அகன்று விடும் என்று கூறினார்கள். மேயர், இங்கு அஹ்மதிய்யா சமூகம் அமைதி நிறைந்ததாக இருக்கின்றது. இவர்கள் மிகவும் அன்பு செலுத்துகின்ற மக்களாவர் என்று கூறினார்.

இதற்கு ஹுஸூர் அவர்கள், இதற்குக் காரணம் அவர்கள் இந்தக் காலத்தில் வந்த மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்த மஸீஹ், நான் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் அடிச்சுவடுகளை பின்பற்றி வந்துள்ளேன். முதலாவது மஸீஹ் எவ்வாறு செயல்பட்டாரோ என்ன போதனையைத் தந்தாரோ நானும் அவ்வாறே செய்வேன். என்னை ஏற்றுக் கொள்பவர்களும் இவ்வாறே செயல்படுவார்கள் என்று அறிவிப்பு செய்தார்கள். அஹ்மதிகள் இந்தக் காலத்தில் வந்துள்ள மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டிருப்பதால் அமைதியை விரும்புபவர்களாக இருக்க வேண்டியது அவர்களுக்கு கட்டயமானதாகும். மேலும் அவர்கள் எல்லாரிடமும் அன்புடனும் நேசத்துடனும் நடந்து கொள்பவர்களாக இருப்பர். மற்றவர்களைக் கருத்தில் கொள்பவர்களாக இருப்பர் என்று கூறினார்கள்.

புதிதாக கட்டப்பட்டுள்ளவற்றை நீங்கள் பார்த்தீர்களா? என்று மேயர் அவர்கள் கேட்டார்கள். இதற்கு ஹுஸூர் அவர்கள், நான் நேற்று வந்தேன். கொஞ்சம் நேரம் கழிந்த பிறகு நான் இந்தக் கட்டடங்களையும் பார்த்தேன். தாங்கள் இதற்கான அனுமதியை வழங்கியதற்காக நான் உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். இன்று நாம் அமர்ந்துள்ள இந்த இடமும் கூட புதிய இடமாகும். மிகவும் நல்ல இடமாகும். அது அல்லாமல் இதற்கு முன்னர் இதுபோன்ற இடங்கள் இருக்கவில்லை என்று கூறினார்கள்.

மேயர் அவர்கள் இந்தப் பள்ளிவாயில் மிகவும் அழகாக இருக்கின்றது. எனது எண்ணத்திற்கேற்ப இது ஸ்கேண்டினேவியாவின் முதல் பள்ளிவாயில் ஆகும் என்று கூறினார்கள். அதற்கு ஹுஸூர் அவர்கள் தனது கட்டடக் கலைத் திறமையின் அடிப்படையில் உங்களது பகுதியில் இது அழகான கட்டடமாகும். இந்தக் கட்டடம் *Listed* ஆக (புகழ்பெற்ற கட்டடங்களில் ஒன்றாக) இருக்க வேண்டும் என்று கூறினார்கள். மேலும் இப்போது கீழே ஒரு பெரிய ஹாலும் கட்டப்பட்டுள்ளது. உங்களது நிகழ்ச்சிகளையும் நீங்கள் இங்கு நடத்திக் கொள்ளலாம் என்று ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்.

ஹுஸூர் இன்றைய நாட்களில் நீங்கள் எங்கு இருக்கின்றீர்கள்? உலகிலுள்ள நாடுகளுக்கு எப்போது சுற்றுப்பயணம் செல்கின்றீர்கள்? என்ற கேள்விக்கு ஹுஸூர் அவர்கள், இன்றைய நாட்களில் நான் இலண்டனில் இருக்கின்றேன். எங்கு தேவை இருக்கின்றதோ அப்படிப்பட்ட உலகின் பல்வேறு நாடுகளுக்கு நான் சுற்றுப் பயணத்தின் செல்கின்றேன். உலகம் முழுவதும் எங்களது பிரச்சார நிலையங்கள் இருக்கின்றன. அவற்றில் சில மிகவும் புதியனவாகும். சில மிகவும் பழையனவாகும். புதிதாக பள்ளிவாயில்கள் அல்லது மையங்கள் கட்டப்படும்போது அல்லது ஏதாவதொரு சிறப்பான நிகழ்ச்சி இருந்தால் அங்கு நான் செல்வேன். கடந்த வருடம் நவம்பரில் நான் ஜப்பான் சென்றேன். அங்கு நமது முதல் பள்ளிவாயில் கட்டப்பட்டது. ஆக, இதுபோன்ற குறிப்பான சந்தர்ப்பங்களில் நான் பயணம் மேற்கொள்கின்றேன் என்று கூறினார்கள்.

ஹுஸூர் அவர்கள் கேட்டதற்குப் பதில் கூறும் வகையில் மேயர் அவர்கள், இந்தப் பகுதியில் 41 கவுன்சில்கள் உள்ளன. இந்தப் பகுதியின் மக்கள் தொகை 55 ஆயிரமாகும். இவர்களில் 35 ஆயிரம் பேர் வாக்களிப்பதற்கு தகுதியுடையவர்களாக இருக்கின்றனர். இவர்கள் 18 அல்லது அதை விட அதிகமான வயதை உடையவர்களாவர். இவர்கள் வாக்களிப்பவர்களின் பெயர் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர் என்று கூறினார்கள். அதற்கு ஹுஸூர் அவர்கள் இதன் பொருள் உங்கள் பகுதியில் இருக்கின்ற குடிமக்களின் மூன்றாவது பகுதி 18 வயதை விடக் குறைந்ததாக இருக்கின்றது. இவ்வகையில் உங்களது இளைஞர்கள் குறைந்து கொண்டிருக்கின்றனர். உங்களது இளைய தலைமுறையின் எண்ணிக்கையை அதிகமாக்குங்கள். உங்களது குடும்பங்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்கும்படி நீங்கள் செய்யுங்கள் என்று கூறினார்கள். மேலும் உங்களது பகுதி மிகவும் நன்றாக இருக்கின்றது. புத்தம்புது காற்று வீசுகின்றது. மகிழ்ச்சிதரக்கூடிய சூழ்நிலை நிலவுகின்றது. ஒரு நல்ல சுற்றுச்சூழல் இருக்கின்றது என்று ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்.

கவுன்சிலரான மாரியா என்ற ஒரு பெண்மணி, உங்களுக்கு இஸ்லாத்தைப் பரப்புவதற்கும் அமைதியை நிலைநாட்டுவதற்கும் என்ன அறைகூவலை எதிர்கொள்ள வேண்டியது வருகின்றது? நீங்கள் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்படுகின்றீர்கள். அதை எப்படி எதிர்கொள்கின்றீர்கள்? என்று ஹுஸூர் அவர்களிடம் கேட்டார்.

அதற்கு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு பதில் கூறினார்கள்: இஸ்லாமிய நாடுகளில் குறிப்பாக பாகிஸ்தானில் எங்களுக்கு எதிராக அரசாங்க அளவில் கொடுமைகள் இழைக்கப்படுகின்றன. முறையாக இதற்கென்று சட்டம் இயற்றப்படுகின்றன. அந்தச் சட்டத்தின் அடிப்படையில் நாங்கள் எங்களை முஸ்லிம்கள் என்று கூற முடியாது. முஸ்லிம் என்ற நிலையில் செயல்பட முடியாது. எங்களை நாங்கள் முஸ்லிம்கள் என்று வெளிப்படுத்திக் காட்டவும் முடியாது.

இந்தோனேஷியா போன்ற மற்ற நாடுகளில் அரசாங்க அளவில் அதுபோன்ற எந்தவொரு சட்டமும் இல்லை. ஆனால், அங்கும் கூட எங்கள் உரிமைகளிலிருந்து நாங்கள் விலக்கி வைக்கப்படுகின்றோம். அங்கு நாங்கள் பகிரங்கமாக தப்லீக் செய்ய முடியாது. எங்கள் தூதுச் செய்தியை எட்ட வைக்க முடியாது. ஆனால், அவ்வாறிருந்தும் கூட இந்த நாடுகளில் எங்கள் சமூகம் தொடர்ந்து முன்னேறி வருகின்றது. அறைகூவலை ஒவ்வோரிடத்திலும் சந்திக்க வேண்டியது வருகின்றது. இது விளையாட்டின் ஒரு பகுதியாகும். கால்பந்து விளையாடும் போது வெற்றி பெறுவதற்காக முயற்சி செய்ய வேண்டியது வருகின்றது. மறுபுறம் துன்பங்கள் முன்னே வருகின்றன. எனவே, இலக்கை அடைவதற்கு அதிகமான துன்பங்களை எதிர்கொள்ள வேண்டியது வருகின்றது. ஆனால், இந்த எல்லா விஷயங்களும் இருந்தும் கூட நாங்கள்

முன்னேறிக் கொண்டிருக்கின்றோம். ஒவ்வொரு வருடமும் ஐந்து இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் ஜமாஅத்தில் இணைந்து கொண்டிருக்கின்றனர். முழு உலகிலிருந்தும் இணைந்து கொண்டிருக்கின்றனர். இவ்வாறு இணைபவர்கள் அமைதியை விரும்புகின்ற மக்கள் ஆவர். உங்களது தூதுச் செய்தி நல்லதாக இருந்தால் நேசமிக்கதாக இருந்தால் அது ஏற்றுக் கொள்ளப்படும். அது நல்லதாக இல்லாமல் இருந்தால் அது மறுக்கப்பட்டு விடும்.

ஆனால், தீவிரவாதத்தை விரும்புகின்ற மக்களின் கடுமையை விரும்புகின்ற தூதுச் செய்தியானது தற்காலிகமாக ஓரளவு மற்றவர்களை ஈர்த்திருக்கின்றது. ஆனால், நீண்ட காலம் வரை அதன் ஈர்ப்பு இருக்க முடியாது. இப்போது எந்த இளைஞர்கள் ஐரோப்பாவிலிருந்து சென்று இந்த அமைப்புகளில் இணைகின்றனரோ அவர்களுக்கு சிறிது காலம் கழிந்த பிறகு யதார்த்தமான உண்மை பற்றி தெரிய வந்ததும் இத்தகைய நிலைமையிலிருந்து வெளியில் வர அவர்கள் எண்ணுகின்றனர். ஆனால், இவர்கள் திரும்ப வருவது கடினமாகத் தோன்றுகின்றது. இந்த இக்கட்டான நிலையில் ஒன்று, அவர்கள் கொல்லப்படுகின்றனர் அல்லது இந்த ஜிஹாது அமைப்புகளின் கொடுமைக்கு இலக்காகின்றனர்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: நமது தூதுச் செய்தி எப்படிப்பட்டது என்றால் இலட்சக்கணக்கான மக்கள் அஹ்மதிய்யத் அதாவது உண்மை இஸ்லாத்தில் இணைகின்றனர். அரபு நாடுகளில் அரசாங்க அளவிலும் அங்குள்ள ஆலிம்கள் தரப்பிலிருந்தும் எங்களுக்கு எதிர்ப்பு இருந்து வருகின்றது. ஆனால், அவ்வாறிருந்தும் கூட அரபு நாடுகளிலும் கூட மக்கள் அஹ்மதிய்யத்தில் இணைகின்றனர்.

ஏதாவதொரு வகையில் உங்களுக்கு ஆபத்து இருக்கும் என்று ஒரு கவுன்சிலர் கூறினார். அதற்கு ஹுஸூர் அவர்கள் பாகிஸ்தானில் நானும் கைது செய்யப்பட்டிருக்கின்றேன். ஒரு பேருந்து நிலையத்திற்கு அருகிலிருந்த ஒரு போர்டில் எழுதப்பட்டிருந்த திருக்குர்ஆனின் வசனத்தை அழிப்பதற்கு நான் முயற்சி செய்தேன் என்று என் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. அது முழுக்க முழுக்க தவறாகும். இவ்வாறு எதிரிகள் எந்த ஆதாரமும் இல்லாமல் குற்றச்சாட்டுகளைச் சுமத்துகின்றனர். பிறகு அவர்கள் எங்களை துன்புறுத்துகின்றனர். இதைக் கேட்டு விட்டு கவுன்சிலர் அவர்கள் ஐரோப்பாவில் இருந்தவாறு எனக்கு இத்தகைய அநீதிகளைப் பற்றி சிந்திப்பது கூட கடினமாக இருக்கின்றது. இங்கு நாம் சுதந்திரமாக இருக்கின்றோம். மார்க்கச் சுதந்திரம் இங்கு இருக்கின்றது. பேசுவதற்கும் பிரசாரம் செய்வதற்கும் சுதந்திரம் இருக்கின்றது. தான் விரும்புவது போன்று ஒருவர் பேச முடியும். தமது செயல்களை வெளிப்படுத்த முடியும் என்று கூறினார்.

இதற்கு ஹுஸூர் அவர்கள் இங்கு பேசுவதற்கான சுதந்திரம் இருக்கின்றது. ஆனால், இங்கு யூதர்களுக்கு எதிரான விஷயங்களை உங்களால் வெளிப்படுத்திக் கூற முடியாது. யூதர்களுக்கு எதிராக உங்களால் பேச முடியாது. நீங்கள் எந்தவொரு நாட்டின் தலைவரையும் பரிகாசம் செய்யும் வகையில் அவரை ஏளனத்திற்கு ஆளாக்கக் கூடாது என்ற இந்த சட்டம் ஜெர்மனியில் இருக்கின்றது. இப்போது தர்க்ஷ் அதிபரின் கேலிச் சித்திரம் வரையப்பட்டபோது ஜெர்மன் *Chancellor* அவர்கள் இது சட்டத்திற்கு எதிரானதாகும் என்று கூறியுள்ளார். எவர் அவ்வாறு செய்தாரோ அவருக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளனர்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: மார்க்கச் சுதந்திரம் இருக்கின்றது. கருத்துச் சுதந்திரம் இருக்கின்றது. தப்லீக் செய்வதற்கும் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கும் சுதந்திரம் இருக்கின்றது என்பது சரிதான். ஆனால், இந்த சுதந்திரம் மற்றவர்களது உணர்வுகளைக் காயப்படுத்துகின்றது என்றால் பிறகு அதற்கு ஒரு வரம்பை ஏற்படுத்த வேண்டும். ஏதாவதொரு வழியை ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் அமைதி, சகிப்புத்தன்மை, சகோரத்துவம் ஆகியவற்றின் சுற்றுச் சூழலை நாம் நிலைநாட்ட முடியும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: கருத்துச் சுதந்திரம் தொடர்பாக நான் கூறிய கருத்துக்களுடன் அறிவுள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் உடன்பாடு இருக்கும். கத்தோலிக்க போப் அவர்களும் கூட எனது நல்ல நண்பர். ஒருவர் எனது தாய்க்கு எதிராக ஏசிப் பேசினால் பிறகு அவர் குத்துகளை வாங்கிக் கொள்வதற்கு தயாராக இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார்கள். கிறிஸ்தவர்கள் போப் கூறும் விஷயங்களைக் கேட்க வேண்டும். போப் அவர்கள் மக்களது உணர்வுகளைப் பாதுகாப்பதற்கு முயற்சி செய்கின்றார். இந்த வகையில் அவர் கிறிஸ்தவத்தின் அசல் போதனைகளுக்கேற்ப செயல்படுகின்றார் என்றே நான் கருதுகின்றேன்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: மேற்கத்திய உலகில் சுதந்திரத்தை வெளிப்படுத்துகின்ற உச்சநிலை எவ்வாறிருக்கின்றது? என்றால் அவர்கள் மற்றவர்களை எள்ளி நகையாடுகின்றனர். கேலிச் சித்திரங்களை வரைந்து எள்ளி நகையாடுகின்றனர். முஸ்லிம்களின் உலகில் சுதந்திரம் என்ற பெயரில் அதன் உச்சநிலை எவ்வாறிருக்கின்றது? என்றால் எங்களை நாங்கள் முஸ்லிம்கள் என்று கூட கூறிக் கொள்ள முடியாது. மார்க்கத்தின் பெயரில் பரஸ்பரம் அவர்களில் ஒருவர் மற்றவரை கொலை செய்கின்றனர். பொருட்களைக் கொள்ளையடிக்கின்றனர். எனவே, இதுவே நாம் அமைதியை நிலைநாட்ட வேண்டிய நேரமாகும்.

மார்க்கத்தில் எவ்வித பலவந்தமும் இல்லை என்று இஸ்லாம் கூறுகின்றது. மார்க்கத்தின் விவகாரம் இறைவனின் கைகளில் இருக்கின்றது. மதங்கள் தொடர்பாக அவனே முடிவு எடுக்க வேண்டியது உள்ளது. மனிதர்கள் பரஸ்பரம் ஒருவர் மற்றவருக்கு கண்ணியமளிக்க வேண்டும். மனிதனின் கண்ணியம் முக்கியமானதாகும். அவற்றை கருத்தில் கொள்ளுங்கள். மதம் தொடர்பான விவகாரம் இறைவனின் கைகளில் இருக்கும்படி விட்டு விடுங்கள். மதங்களை ஏற்றுக் கொண்டவர்கள் பரஸ்பரம் அவர்களில் ஒருவர் மற்றவரை அடித்தால், கொலை செய்தால் பிறகு எவர் எந்த மதத்தின்படி செயல்பட முடியும்? பிறகு மதத்தால் என்ன பலன் இருக்கும்? ஒருவர் மற்றவரை கொலை செய்தவாறு எல்லாருமே இறுதியில் அழிந்து விடுவர்.

நாம் அனைவரும் மனிதர்கள் ஆவோம். நாம் மனிதர்களின் கண்ணியத்தை நிலைநாட்ட வேண்டும். பரஸ்பரம் நம்மிடயே ஒருவர் மற்றவருடன் கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டும் என்ற இந்தக் கொள்கையில் நிலைத்திருந்தால்தான் நாம் உலகில் அமைதியை நிலைநாட்ட முடியும்.

ஹுஸூர் அவர்கள் எப்போதிருந்து கலீஃபாவாக இருக்கின்றீர்கள் என்ற கேள்விக்கு நான் கடந்த 13 வருடங்களாக இந்த உயர்ந்த பொறுப்பில் இருந்து வருகின்றேன் என்று ஹுஸூர் அவர்கள் பதில் கூறினார்கள்.

ஒரு கேள்விக்கு பதில் கூறும்போது ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நான் 2005 -ல் இங்கு வந்தேன். அப்போது இந்த கட்டடம் இருக்கவில்லை. இப்போது இங்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இங்கு எங்களது உள்ளூர் சமூகம் உள்ளது. பல மக்களும் குடும்பங்களும் எனக்காக காத்துக் கொண்டிருக்கின்றனர். மக்கள் தமது நெருங்கிய உறவினர்களையும் நேசத்திற்குரியவர்களையும் சந்திப்பது போன்று என்னை சந்திக்கின்றனர். நான் அவர்களை சந்திக்கின்றேன். நாங்கள் பரஸ்பரம் எங்களுக்கிடையே இவ்வாறு சந்திப்பதன் மூலம் மகிழ்ச்சி ஏற்படுகின்றது. இவ்வாறே எங்கள் சந்திப்புகள் நடக்கின்றன.

மேயர் மற்றும் கவுன்சிலர்களுடன் நடைபெற்ற இந்தக் கூட்டம் 7 மணி 25 நிமிடத்திற்கு முடிவடைந்தது. இறுதியில் எல்லா விருந்தினர்களுக்கும் ஹுஸூர் அவர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொள்ளும் நற்பாக்கியம் கிடைத்தது. அதற்கு பிறகு ஹுஸூர் அவர்கள் தமது அலுவலகத்திற்கு வந்தார்கள். நிகழ்ச்சிக்கேற்ப இங்கு குடும்பங்கள் ஹுஸூர் சந்திப்பது ஆரம்பமானது. இன்று 25 குடும்பங்களைச் சார்ந்த 84 நபர்கள் ஹுஸூர் அவர்களைச் சந்திக்கும் நற்பாக்கியத்தைப் பெற்றனர். ஒவ்வொருவரும் ஹுஸூர் அவர்களுடன் புகைப்படம் எடுக்கும் நற்பாக்கியத்தையும் பெற்றனர். ஹுஸூர் (அய்) அவர்கள் மிகுந்த பரிவுடன் கல்வி கற்கும் குழந்தைகளுக்கு பேனா வழங்கினார்கள். சிறு வயதை உடைய சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் சாக்லேட் வழங்கினார்கள்.

சந்திக்கின்ற குடும்பங்கள் டென்மார்க்கின் *Hvidovre, Copenhagen, Aartivs, Amager, Albertslund, Broendby* போன்ற பகுதிகளிலிருந்து வந்திருந்தனர்.

இன்று ஹுஸூர் (அய்) அவர்களைச் சந்திக்க வந்த குடும்பங்களில் சில குடும்பங்கள் முதன்முறையாக ஹுஸூர் அவர்களை சந்திப்பவர்களாக இருந்தனர். அவர்களது உணர்வுகளும் மகிழ்ச்சியின் வெளிப்பாடும் அவர்களது முகங்களிலிருந்து தெரிய வருகின்றது. அனைவருமே தங்களுக்கு கிடைத்த நற்பாக்கியத்தை நினைத்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர். அவர்களுக்கு கலீஃபத்துல் மஸீஹின் அருகில் சில நொடிகள் கழிப்பதற்கான வாய்ப்பு கிடைத்த அந்த நாள் அவர்களது வாழ்நாளின் அருளுக்குரிய நாளாக இருந்தது என்பதை நினைத்து அவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர். அல்லாஹ் இந்த அருள்களை நிரந்தரமானதாக ஆக்குவானாக! நமது தலைமுறையும் இந்த அருள்களிலிருந்து பலன் பெறட்டுமாக! ஆமீன்.

சந்திப்புகளின் இந்த நிகழ்ச்சி 8 மணி 25 நிமிடங்கள் வரை நீடித்தது. இதற்கு பிறகு ஹுஸூர் அவர்கள் தான் தங்கியிருந்த இடத்திற்கு திரும்பி சென்றார்கள்.

9.15 மணிக்கு ஹுஸூர் (அய்) அவர்கள் நுஸ்ரத் ஜஹான் பள்ளிவாசலுக்கு வந்து மக்ரிப் மற்றும் இஷா தொழுகைகளைச் சேர்த்து தொழ வைத்தார்கள். தொழுகைகளை நிறைவேற்றிய பிறகு ஹுஸூர் (அய்) அவர்கள், தான் தங்கியிருந்த பகுதிக்கு திரும்பிச் சென்றார்கள்.

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 99448-03650
SUB EDITOR
RAFEEQ AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Title Code: PUNTAM00001

The Weekly **BADAR** Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Vol. 1 | Thursday 11 AUGUST 2016 | Issue No. 23

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
Tel. : +91 1872-224757
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் எப்போதெல்லாம் எங்கு பள்ளிவாயில் கட்டினாலும் அது ஓர் அமைதியின் வீடாக இருக்கின்றது. அங்கு திருக்குர்ஆனின் உயர்வான போதனைகளின் ஒளியில் மக்கள் அல்லாஹ்வை வணங்குவதற்காக ஒன்று கூடுகின்றனர். நமது பள்ளிவாயில்களின் கதவுகள் இறைவனை வணங்க விரும்புகின்ற மற்றும் அமைதியை விரும்புகின்ற அனைத்து மக்களுக்காகவும் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றது.*

## சுவீடனிலுள்ள மால்மோவில் மஹ்மூது பள்ளிவாயிலின் துவக்கத்திற்காக நடைபெற்ற நிகழ்ச்சியில் 14 மே 2016 அன்று ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் ஆற்றிய எழுச்சியூட்டக்கூடிய சொற்பொழிவு

தஷஹ்ஹுது மற்றும் தஸ்மியா ஓதிய பிறகு ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

கண்ணியத்திற்குரிய எல்லா விருந்தினர்களுக்கும் எனது ஸலாத்தை தெரிவித்துக் கொள்கின்றேன். அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹு. உங்கள் எல்லார் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும் கருணையும் அருள்களும் இறங்கட்டும்! எல்லாவற்றிற்கும் முதலாவதாக இந்த சந்தர்ப்பத்தில் உள்ளத்திலிருந்து எனது எல்லா விருந்தினர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். அவர்கள் மால்மோவில் நமது புதிய பள்ளிவாயிலின் தொடக்க நிகழ்ச்சிக்காக விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்றுக் கொண்டனர். உங்களில் பெரும்பாலார் அஹ்மதிய்யா ஜமாஅத்தைச் சார்ந்தவரல்ல. எனவே, நீங்கள் இஸ்லாமிய நிகழ்ச்சியில் கலந்து கொள்வது நீங்கள் திறந்த உள்ளத்திற்கு எஜமானர்களாக இருக்கின்றீர்கள் என்பதையும், சகிப்புத் தன்மையைக் கொண்ட மக்களாகத் திகழ்கின்றீர்கள் என்பதையும் நிரூபிக்கின்றது. எனவே, நீங்கள் எங்களது குறிப்பான நன்றியைத் தெரிவிப்பதற்குத் தகுதியுடையவர்களாக இருக்கின்றீர்கள்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

உங்களில் எவர்கள் இப்போது இங்கு இருக்கின்றனரோ அவர்களில் சிலர் தங்களது உள்ளங்களில் பள்ளிவாயிலின் துவக்க நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் சில அபாயங்களை உணர்பவர்களாகவும் மற்றும் தங்களது பாதுகாப்பு பற்றி எண்ணக்கூடியவர்களாகவும் இருப்பீர்கள். ஒருவேளை நமது பள்ளிவாயிலைப் பற்றி புகார் கூறுபவர்களாகவும் அவர்கள் இருக்கலாம். குறிப்பாக முஸ்லிம்களுடன் மிகக் குறைவாக அல்லது முற்றிலும் தொடர்பில்லாத மக்கள் இவ்வாறு புகார் கூறலாம். மேலும், அவர்கள் ஐரோப்பாவில் அல்லது முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளில் பள்ளிவாயில்கள் கட்டப்படவே கூடாது என்றும் கூட அவர்கள் கருதுகின்றனர். ஒருவேளை அவர்கள் பள்ளிவாயில்களைத் தங்களது சமுதாயத்தின் உறுதியற்ற தன்மை மற்றும் பகைமை அதிகரிப்பதற்கான காரணமாகக் கருதுகின்றனர்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

ஒருவேளை அத்தகைய மக்கள் தங்களது பாதுகாப்பைக் கருத்தில் கொள்வதை ஓரளவு பொருத்தமான செயலாகத்தான் கருத வேண்டியதுள்ளது என மிகுந்த வேதனையுடன் கூற வேண்டியது வருகின்றது. ஏனென்றால், சில பெயர்தாங்கி முஸ்லிம்கள் பள்ளிவாயில்களைத் தங்களது தீய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகப் பயன்படுத்துகின்றனர். அத்தகைய மக்கள் கடுமை காட்டுவதை விரும்புவதுடன் தீவிரவாதத்தையும் வளர்க்கின்றனர். எனவே, எல்லாவற்றிற்கும் முதலாவதாக நான் எனது எல்லா விருந்தினர்களுக்கும் மற்றும் நகரத்திலுள்ள மக்களுக்கும் அவர்கள் இந்தப் பள்ளிவாயிலைப் பார்த்து சிறிதும் அஞ்சவே தேவையில்லை என நான் அவர்களுக்கு உறுதியளிக்கின்றேன். உண்மையான முஸ்லிம்களும் உண்மையான பள்ளிவாயில்களும் சமுதாயத்தின் பகைமையையும் காழ்ப்புணர்ச்சியையும் பரப்புவதற்குப் பகரமாக, முழுக்க முழுக்க அன்பு நேசம் மற்றும் சகோதரத்துவம் ஆகியவற்றையே பரப்புகின்றது. உண்மை என்னவென்றால், ஒருவர் உண்மையான முஸ்லிம்களைச் சந்திக்கும்போது அவருக்கு அந்த முஸ்லிமிடமிருந்து சாந்தி மட்டுமே கிடைக்க வேண்டும். இவ்வாறே ஒருவர் எப்போது பள்ளிவாயிலில் நுழைந்தாலும் அவருக்கு அதிலிருந்து அமைதியும் நிம்மதியும் கிடைக்க வேண்டும். இதற்கு நேர் மாற்றமான நிலை இருந்தால், இந்தப் பள்ளிவாயிலை நிரப்புபவர்கள் உண்மையான முஸ்லிம்கள் அல்ல என்பதும் அவர்களுக்கு உண்மையான இஸ்லாமிய போதனைகளைப் புரிந்து கொள்ளும் திறன் இல்லை என்பதும் தான் அதன் பொருளாகும் அல்லது அதன் பொருள், இந்தப் பள்ளிவாயில் நல்ல எண்ணங்களுடன் கட்டப்படவில்லை அல்லது தனது உண்மையான நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அது கட்டப்படவில்லை என்றாகி விடும். எங்கிருந்து தீங்கு பரவுகின்றதோ அத்தகைய பள்ளிவாயில்களுக்கு இஸ்லாத்தில் எந்த இடமும் இல்லை.

திருக்குர்ஆனில் ஒரு சம்பவம் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் ஒரு பள்ளிவாயிலை இடிக்குமாறு கட்டளை இட்டார்கள். ஏனென்றால், இந்தப் பள்ளிவாயில் ஓர் அமைதியின் இடமாகத் திகழ வேண்டும் என்பதற்காக கட்டப்படவில்லை. மாறாக, குழப்பங்களையும் தீங்கையும் பரப்புவதற்காக அது கட்டப்பட்டிருந்தது. இந்தப் பள்ளிவாயிலைக் கட்டியவர்கள் நயவஞ்சகர்கள் ஆவர். அவர்கள் இந்தப் பகுதியிலுள்ள இந்த சமுதாயத்தைச் சார்ந்த முஸ்லிம்களுக்கிடையிலும், முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிம் அல்லாதவர்களுக்கிடையிலும் பிரிவினையை ஏற்படுத்த விரும்பினர். எனவே, இது தொடர்பாக மிகவும் விளக்கமாக இப்படிப்பட்ட தவறான எண்ணங்களுடன் கட்டப்படுகின்ற பள்ளிவாயில்கள் இடிக்கப்பட வேண்டும் என்று திருக்குர்ஆன் கூறுகின்றது.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனரான காதியானைச் சார்ந்த ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலைஹிஸ் ஸலாம்) அவர்களை திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளுக்கேற்ப அவர்கள் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டவர்கள் ஆவார்கள் என்று அஹ்மதி முஸ்லிம்களாகிய நாங்கள் உறுதியாக நம்புகின்றோம். நாங்கள் அன்னாரை இக்காலத்தின் சீர்திருத்தவாதியாக ஏற்றுக் கொண்டிருக்கின்றோம். அவர்களைப் பற்றி ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களே! அவர் இறுதிக் காலத்தின் மஸீஹாகவும் இருப்பார் என்றும் கூறியுள்ளார்கள். அவர்கள் இரு நோக்கங்களுடன் அனுப்பப்பட்டுள்ளார்கள் என்பது எங்களது உறுதியான நம்பிக்கையாகும். அதில் ஒன்று, மனித இனத்தை இறைவனை வணங்குவதற்காக ஒன்று சேர்ப்பதாகும். இரண்டாவது நோக்கம், மனிதர்கள் பரஸ்பரம் அவர்களில் ஒருவர் மற்றவரது உரிமைகளைச் செலுத்துவதன் பக்கம் அவர்களுக்கு கவனமூட்டுவதாகும். அன்னார் உலகிற்கு ஓர் அமைதிக்கான வழியாக அனுப்பப்பட்டார்கள். எனவே, அவர்களைப் பின்பற்றுபவர்களும் கூட எத்தகைய மக்களாக இருக்கின்றனர் என்றால், அவர்கள் சமுதாயத்தில் அன்பு, நேசத்தின் வழிகளை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்பவர்களாக இருக்கின்றனர். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் 127 வருடங்களின் வரலாறு இந்த விஷயத்திற்குச் சாட்சியாக இருக்கின்றது. அதாவது, எந்த விஷயத்தை நாம் சுயமே செய்கின்றோமோ அதையே நாம் தப்லீக் செய்கின்றோம். எந்த உலக மற்றும் அரசியல் நோக்கமும் நமக்கு கிடையாது. மாறாக, எங்களது தூதுச் செய்தி அமைதி, அன்பு மற்றும் பரஸ்பரம் ஒருவர் மற்றவருக்கிடையிலுள்ள விவகாரங்களில் சகிப்புத் தன்மையைக் கடைபிடிக்க வேண்டும் என்ற தூதுச் செய்தியாகும். எங்கள் நோக்கங்கள் முழுக்க முழுக்க ஆன்மீக நோக்கங்களாகும். நாங்கள் இறைவனின் திருப்தியையே விரும்புகின்றோம். மேலும், மனித இனத்திற்கு ஏற்படுகின்ற துக்கமும், வேதனையும் முடிவுக்கு வர வேண்டும் என்று நாங்கள் விரும்புகின்றோம்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

இன்று இஸ்லாத்திற்கு எதிராக பல விஷயங்கள் பேசப்படுகின்றன; எழுதப்படுகின்றன. இஸ்லாம் ஒரு கடுமை காட்டுகின்ற தீவிரவாத மார்க்கமாக ஆக்கப்பட்டுள்ளது. இஸ்லாத்தின் இந்த வடிவத்தை ஒருபோதும் உண்மையானதாக நாம் கருதவில்லை. ஆனால், சில பெயர்தாங்கி முஸ்லிம்களின் அநீதியான செயல்கள் இஸ்லாத்தின் எதிரிகளுக்கு, இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்வதற்கான Licence (உரிமம்) தந்து விட்டது என்பதும் கூட ஒரு கசப்பான உண்மையாகும். எந்நிலையிலும் ஓர் அஹ்மதி முஸ்லிமாக இருக்கின்ற நிலையில் நான், எப்போதெல்லாம் தற்கால நிலைமைகளை ஆராய்ந்து பார்க்கின்றேனோ அப்போதெல்லாம்

*(தொடர்ச்சி 5-வது பக்கம்)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad